தமிழீழ புதிய சனநாயக கட்சி (தமிழீழம்)
www.tamilarangam.net

NDPT NDPT NDPT NDPT NDPT NDPT NDPT

# தேசபக்தன்

NDPT NDPT NDPT NDPT NDPT NDPT NDPT NDPT






## தேசியத் தலைவர்கள்

நாமிருவரும் ---- தேசிய ----!
தேசிய புனரமைப்பு, புனர்வாழ்வுக்கு
அன்னிய நாடுகளிடம், IMF, WB ----இல்
தேசத்தை அடகுவைப்போம்!
நாகரீகமாக ---- தேசத்தை ----!
நவீனமயம், தாராள மயம் உலகமயம்,
தனியார் மயமாக்க
தேசிய வளங்கள், உழைப்பு, உபரியை
உலக மூலதனம் ----!
உலகம் கொள்ளையிட
கை ஒப்பமிடுவோம்!
நாமிருவரும் ---- தேசிய ----!
நமது தேசிய கீதம் .....?

அன்பளிப்பு: 1 டொலர், 1 யூரோ, 20 உருபா

NEW DEMOCRATIC PARTY OF THAMILEELAM

N D P T

RGSD.ISSN-07547-2262 RNI 04512/1999 CANADA

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழ புதிய ... (தமிழீழம்)

# தேசபக்தன்

"சிறு துளி பெரு வெள்ளம்" அன்பளிப்பு 20 உரூபா / வெளிநாடு 1 யூரோ / 1 டொலர்

தமிழீழ புதிய சனநாயக கட்சி தி.பி. 2034 (2003) இதழ் 23

மடல் தொடர்புகளுக்கு மட்டும்

EDITOR
67, PARKWOOD
VILLEGE DR
# 308 DONMILLS
ONTARIO
C A N A D A

T. ARASAN
POST BOOKS-256
NYBORG
5871 BERGEN
N O R W A Y

e-mail: patriot_editor@yahoo.com

www.ndpt.org

RGSD.ISSN-07647-2262 RNI 04512/1999 CANADA

N D P T

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# புலிகளின் தலைமை எங்கே செல்கிறது? தேசபக்த சக்திகளின் கடமை என்ன?

பேச்சுவார்த்தை என இறங்கும் போது, தமிழீழ தனியரசுக் கோரிக்கையை முன் வைக்க முடியாது. ஆனால், **சுயநிர்ணய உரிமை அடிப்படையில்** சிங்கள தேசிய இனத்துக்குள்ள எல்லாவகையான அரசியல் அதிகார உரிமைகளும் உள்ள, தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றியும் அரசியல் - அதிகாரங்கள் குறித்தும், **தேசிய இனங்கள் சம உரிமையுடன் வாழும் இலங்கைக் கூட்டரசு பற்றியும் ஏன் புலிகள் முன் வைக்க வில்லை பேச மறுக்கிறார்கள்.**

புலிகளின் தத்துவ ஆசிரியரும், அரசியல் தீர்வுக்கான குழுவின் ஒரே பிரதிநிதியுமான அன்டன் பாலசிங்கம். **சுயநிர்ணய உரிமை** என்ற வார்த்தை யை பிரயோகிக்கிறார். ஆனால், **சுயநிர்ணய உரிமைக்கான அதிகார வடிவத்தை "சுயாட்சி"** என கீழ்த்தரமாக விளக்கமளிக்கின்றார். புதுக் கொலனிய நாடுகளையும், உலகளவில் தேசிய இனங்களையும் அடக்கி ஒடுக்கி வரும் ஏகாதிபத்திய நாடுகளின், அய்க்கிய நாடுகள் சபையின் (U.N) இன் ஒரு தேர்ந் தெடுக்கப்பட்ட இராஜதந்திரிபோல் - அதிகாரி போன்று, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பதற்கான அரசியல் அதிகார விளக்கத்தை **'சுயாட்சி - பூரணசுயாட்சி உள்தேச சுயநிர்யணம்'** என கொச்சைப்படுத்துகிறார். **சிறீலங்காவின் ஒற்றையாட்சி முறைக்குள் உலக ஏகாதிபத்திய ஒற்றை உலக ஒழுங்கு முறைக் குள்** புலிகளின் தலைமை சரண் அடைய தொடங்குகிறார்கள் என்பதை மறைக்க முயல்கிறார்.

தமிழீழ மக்களை புலிப்போராளிகளை, உலக தமிழர்களை ஏமாற்றுவதற்காக **'சுயநிர்ணயம்'** என்ற வார்த்தையை பேசு

கிறார்கள். திம்புக் கோரிக்கைகளை அதன் வாசகங்களை கைவிட்டு விட்டால், புலிகளை. போராடும் உள்நாட்டு மக்களும் - உலக மக்களும் அடையாளம் கண்டுவிடுவார்கள். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் துரோகிகளாக தங்களை தமிழீழ மக்கள் பார்ப்பார்கள் என்பதை மறைக்க முயல்கிறார்கள். திம்புக் கோரிக்கைகளை கைவிடாமல் தான், புலிகள். சிறீலங்கா அரசுடன் - எதிரியுடன் சமரசப்பட்டார்கள் எனக் காட்டுவதற்காக **' தாயகம், தேசியம், சுயநிர்ணயம்'** என்ற அகராதியை முன்னிறுத்து கின்றனர். **பிரபாகரனின் மாவீரர் தின உரை** புலிகள் **தனித் தமிழீழக் கோரிக்கையை மட்டும் கைவிடவில்லை, தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையையும் கை விட்டு விடத் தயார் என்பதை தெளிவுப்படுத்தி யுள்ளது.**

**புலிகளின் தாகம் தமிழீழ தாகம்'** என்பதை மாற்றி **"புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்"** என சூழுரைத்துள்ளார்.

**தனித்தமிழீழம் உருவாகும்** அல்லது **சுயநிர்ணய உரிமை யுள்ள கூட்டரசு உருவாகும்**. என்ற இலட்சிய கனவுகளுடன் மடிந்த மாவீரர்களின் நினைவு தினத்தில், புலிகளின் தலைவர் **பிரதேச சுயாட்சிக்கு தாங்கள் தயார்** என அறிவித்திருப்பது, மாவீரர்களுக்கு துரோகம் செய்வதல்லவா?

சிங்கள தேசிய இனத்துக்குள்ள சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான எல்லா அரசியல் அதிகார உரிமைகளும், தமிழ்த் தேசிய இனத்துக்கும் அதன் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் இருக்கிறது. ஆனால் புலிகள் இந்த அரசியல் கோரிக்கையை முன்வைப்பதற்கு பதிலாகதமிழ்த் தேசிய இனத்துக்கு அரசியல் சாசன அடிப்படையில் சம உரிமையை கோருவதற்கு பதிலாக **தமிழ்ப்பகுதி யை புனரமைக்க அன்னிய நாடுகளிடம் கை ஏந்தி நிற்பதில் சிங்கள தரப்புக்கு தமிழ்த் தரப்பு சமனானது** என்பதை நிரூபிப்பதில் அக்கறை காட்டி வருகிறது.

அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகள், தெற்காசியரவில் தங்களின் புதுக் கொலனிய முறையை,

www.tamilarangam.net


உலகமயமாக்கல் திட்டத்தை ஆழப்படுத்தி-அகலப்படுத்தி வருகின்றன. அமெரிக்காவின் பொருளாதார இராணுவ-அரசியல் நலன்களுக்கு உகந்த முறையில் ஆசியப் பிராந்தியம் மறு சீரமைக்கப்படுகிறது. ஏகாதிபத்திய சுரண்டல் முறைக்கு, ஆதிக்க அதிகார முறைக்கு இசைவான **முதலாளித்துவ சமாதான சக வாழ்வு அமைதிக் கொள்கை** பிரயோகிக்கப்படுகிறது. முன் தள்ளப்படுகிறது. இலங்கை மீது அரசியல் தீர்வை திணிக்கிறது. ஈராக் மீது இராணுவத்தீர்வை திணிக்கிறது.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்ந்து நடக்குமானால் தெற்காசிய பிராந்தியத்தில், ஏகாதிபத்திய புதுக் கொலனிய தேசிய ஒடுக்கு முறைக்கு எதிரான தேசிய - வர்க்க விடுதலைப் போராட்டங்கள் கூர்மையடைய புறநிலையில் நம்பிக்கையளிக்கும். தெற்காசியாவில் புலிகளின் இராணுவப் போராட்ட முறைகள் பிரதிபலிக்கத் தொடங்கியுள்ளன. புலிகளை நசுக்க, சிறீலங்கா அரசுக்கு அன்னிய நாடுகள் எவ்வளவோ உதவிய போதும் புலிகளை அழிக்க முடியவில்லை. புலிகள் முதலாளித்துவ உலக பொருளாதார முறையை ஏற்றுள்ளவர்கள். எனவே புலிகளையும் - சிறீலங்கா அரசையும் சமரசப் படுத்தி இரண்டு பகுதிகளிலும் புதுக் கொலனிய முறையை ஆழப்படுத்தும் ஒரு திட்டத்தை முன்வைத்துள்ளன ஏகாதிபத்திய நாடுகள். இந்த ஏகாதிபத்திய மூலோ பாயம் தெற்காசிய விரிவாதிக்க அரசான இந்தியாவுக்கும் உடன்பாடானாது. ஆனால் தந்திரோபாயங்களில் முரண்பாடுகள் இருக்கின்றன. அமெரிக்காவுக்கு இலங்கையை இரண்டாக பிரித்தாலும் அதனது தெற்காசியா மீதான இராணுவ மூலோபாயத்துக்கு சாதகமானது. இலங்கையை இரண்டாக்குவது இந்திய அரசின் விரிவாதிக்க மூலோபாயத்துக்கு என்றும் ஏற்புடையதல்ல. இதுதான் இலங்கைப் பிரச்சனையிலான அணுகுமுறை முரண்பாடாகும்.

மேற்கு ஆசியாவில் நோர்வே அரசு வழியாக இத்தகைய ஒரு திட்டத்தை பாலஸ்தீனப் பிரச்சினையில் கையாண்டு **ஒஸ்லோ**

**ஒப்பந்தம்** நிறைவேற்றப் பட்டது. பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட விடுதலை இயக்கங்கள் போராடிக் கொண்டிருந்தது. இதனால் அவ்வளவு இலகுவாக **ஏகாதிபத்திய சமாதான சகவாழ்வு அமைதிக் கொள்கை** வெற்றி யளிக்கவில்லை. ஆனால், போராட்டத்தில் பிளவுகளை ஏற் படுத்தியது ஏகாதிபத்திய நாடுகள்.

ஏகாதிபத்திய நாடுகளின் இந்தத் திட்டத்தை **நோர்வே அரசு** ஒரு செயலணி நாடாக **கைதேர்ந்த சமாதான தூதனாக** நின்று உலகில் செயற்படுத்தி வருகிறது. இதுவரைகால சிங்கள இனவாத ஆளுங்கட்சிகளின் செயற்பாடு போல், ஒரு ஆளும் கட்சி செய்யும் ஒப்பந்தத்தை மற்றய கட்சி கிளித் தெறியுமானால், ஏகாதிபத்திய சமரச திட்டத்தை கீழ் இறங்கி ஏற்க மறுத்தால், புலிகளுக்கு சார்பாக நின்று தமிழீழத்தை, தனிநாட்டை, ஏகாதிபத்திய நாடுகளே உருவாக்கி கொடுத்து விடும் என பயமுறுத்துகின்றன. இதைப் புரிந்து கொண்ட படியால்தான் **புலிகளின் தலைவர்** மாவீரர் தின உரையில் பிரதேச சுயாட்சித் தீர்வுக்கு தாங்கள் தயார். இதற்கும் சிங்களத்தேசம் தயார் இல்லையெனில் நாங்கள் பிரிந்து சென்று **தமிழீழத் தனியரசு உருவாக்குவதைத் தவிர வேறு வழியில்லை** என உரைத்துள்ளார். பேச்சுவார்த்தை மூலமான தீர்வு என்றால் **'ஒற்றையாட்சிக்குள் சுயாட்சி'**யை ஏற்றுக் கொள்ளத் தயார். அது இல்லை எனில் **'தனி நாடு'** தான் என்றார். இரண்டு எதிர் எதிர் நிலைக்கு புலிகள் இன்று இறங்கியுள்ளனர்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் 1987க்கு பின் புலிகள் மட்டுமே ஆயுதப் போரில் ஈடுபட்டு வந்ததால் புலிகளையும் - சிறீலங்கா அரசையும் நோர்வே அரசு சமரசப் படுத்துவது இலகுவாக இருக்கிறது. தமிழீழ தேசிய விடுதலையின் பக்கம் இருந்து உடனடியாக இதற்கு பெரியளவில் எதிர்ப்பு இருக்கப்போவதில்லை.

சிங்களத்தரப்பில்தான் UNPF எதிரான, SLFP, JVP ... போன்ற அரசியல் கட்சிகள் நோர்வேயின் சமரச முயற்சிகளை, தங்களின் இனவாத

www.tamilarangam.net

சுயநல அதிகார நோக்கங்களில் இருந்து எதிர்க்கின்றன. இந்தியரசின் தந்ரோபாய முரண்பாடுகளை பரஸ்பரம் பயன் படுத்துகின்றன. SLFP தலைமையிலான ஒரு குழு இந்திய அரசியல் கட்சிகளுடன் உரையாடல்களை ஆரம்பித்துள்ளன ஆனால், அவர்கள் சிங்கள மக்களின் - தேசத்தின் நலனுக்காக ஏகாதிபத்திய பொருளாதார முறையை - தேசிய ஒடுக்குமுறையை எதிர்க்கின்ற சக்திகளல்ல. ஏகாதி பத்திய சார்பு கொண்ட சிங்கள தரகு சக்திகள், சந்தர்ப்பவாத பிழைப்புவாத சக்திகள் இவற்றை அழுத்தத்தின் வழியாக ஏகாதிபத்திய நாடுகள் சரிக்கட்டி விடமுடியும் என நம்புகின்றன.

சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பேச்சுவார்த்தை வழி **கூட்டா ட்சிக்கு தயார்,** இல்லையெனில் தனித் தமிழீழ அரசை உருவாக்குவதுதான் வழி என்று கூடப் பேசவில்லை. புலிகள் சுயாட்சித் தீர்வுக்கு தயாராக இருப்பதை சிங்களத் தேசம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார். இதன் அர்த்தம் சிங்கள தேசத்தின் முதலாளித்துவ ஆளும் வர்க்க கட்சிகளைத்தான் அவர் கோரியுள்ளார். சிங்கள தேசிய இனத்திலும், தமிழ்த் தேசிய இனத்திலும் முதலாளி - தொழிலாளி வர்க்கங்கள் இருப்பதையும், வர்க்க அரசியலில் இருந்துதான் ஒவ்வொரு வர்க்கமும் தனது பொருளாதார அரசியல் பிரச்சனைகளை அணுகுகின்றன. இதை மறைக்க புதிய ஒரு கருத்து உருவாக்கம் பிரச்சாரப்படுத்தப் படுகிறது. சிங்கள தேசம், தமிழ்த்தேசம், முசுலீம் தேசம், மலையக தேசம் இதன் மூலம் இந்த இன - மத பிரிவு மக்கள் மத்தியில் உள்ள முதலாளித்துவ - குட்டி முதலாளித்துவ சக்திகள் தங்களின் வர்க்க அரசியலை மறைத்து பெரும்பாண்மை உழைக்கும் மக்களை தொடர்ந்து தங்களின் கட்டுப்பாட்டுள் அரசியலுக்குள் வைத்துக் கொள்ள **தேசம், தேசியம், தாயகம்** என்ற பொதுப் பதங்களை முன்தள்ளி வருகின்றன.

உண்மையில் சிங்கள தேசிய இனத்தின் புரட்சிகர தொழிலாளி வர்க்க அரசியல் சக்திகள், தமிழ்த் தேசிய இனத்தின்

www.tamilarangam.net

சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கிறார்கள். சுயநிர்ணய உரிமை அடிப்படையில் கூட்டாட்சி அரசமைப்பு முறையை அங்கீகரிக்கிறார்கள்.

தமிழீழ போராட்டத்தின் தொடக்க காலங்களில் இருந்து புலிகள் இயக்கம், தங்களின் தமிழ் முதலாளித்துவ வர்க்க தேசிய இன அரசியலின் காரணமாக, சிங்கள மக்கள் மத்தியிலுள்ள தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் இயக்கங் களுடன் கூட உறவு வைத்துக் கொண்டதில்லை. தங்களின் எதிரியான சிறீலங்கா இனவாத அரசை எதிர்த்து, ஏகாதி பத்திய தேசிய ஒடுக்குமுறையை எதிர்த்து போராடும் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள புரட்சிகர மக்கள் இயக்கங்களை, தங்களின் நட்பு சக்தியாக கணித்து உறவுகளை பேணியதில்லை. தமிழ் மக்கள் மத்தியில் தேசிய விடுதலையின் பக்கம் நின்ற சிறீலங்கா அரசு எதிர்ப்புக் கொண்ட தமிழீழ விடுதலை இயக்கங்களை நட்பு சக்தியாக பார்க்காத புலிகள். ஒரு தமிழ் முதலாளித்துவ குறுந் தேசியவாத இயக்கம் என்ற நிலையை - எல்லையை ஒரு போதும் தாண்டியதில்லை மீறியதில்லை என்பதுதான் வரலாறு.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், அது ஒரு முதலாளித்துவ தேசிய இன விடுதலை இயக்கம் என்றாலும், தமிழீழ மக்களின் தேசிய விடுதலைக்கான போராட்டத்தின் பக்கம் நின்ற இயக்கம். சிறீலங்கா இனவாத அரசை எதிர்த்து தொடர்ந்து போராடி வந்த இயக்கம், தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஏனைய அரசியல் போராட்டச் சக்திகளை தடைசெய்யும் - அழிக்கும் சர்வாதிகார இயக்கம் - சனநாயக மறுப்பு இயக்கம். வெளிப்படையான ஏகாதிபத்திய எதிர்பற்ற ஒரு இயக்கம். இவற்றை எல்லாம் புரிந்து கொண்டுதான். சிறீலங்கா அரசு என்ற பொது எதிரிக்கு எதிராக போராடி வந்த விடுதலை இயக்கமான புலிகள் இயக்கத்தை, **சிறீலங்கா இனவாத அரசுக்கு எதிராகப் போராடும் வரை**, தமிழீழ புரட்சிகர தொழிலாளி வர்க்க அரசியல் சக்திகள், புரட்சிகர தேசபக்த இயக்கம். தனது நட்பு சக்தியாக அணுகிவந்தது - அணுகிவருகிறது.

www.tamilarangam.net

ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டமானாலும், உள்நாட்டு இன ஒடுக்குமுறை எதிர்ப்பு தேசிய இன விடுதலைப் போராட்டமானாலும், பொது எதிரிக்கு எதிராக தேசிய விடுதலையின் பக்கம் நின்று போராடும் எந்த ஒரு வர்க்க சக்தியானாலும், அவ் இயக்கம் போராடும் வரை **பொது எதிரிக்கு எதிரான நட்பு சக்தியாக** அரசியல் ரீதியில் புரட்சிகர தொழிலாளி வர்க்கம், தேசபக்த இயக்கம் அடையாளம் காண்கிறது. அணுகுகிறது. நட்பு சக்தியுடனான நடைமுறை உறவு எப்படி என்பது துல்லியமான ஒவ்வொரு சூழ்நிலமைகள். பலம் - பலவீனம் என்பவற்றை பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை, ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டம் என புலிகள் வெளிப்படுத்தியதில்லை. உலகளவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலை இயக்கங்களுடன் தங்கள் உறவை உருவாக்கி வளர்த்துக் கொண்டதில்லை. சிறீலங்கா அரசின் தேசிய இன ஒடுக்குமுறையில் இருந்து விடுதலை அடையும் தமிழீழம் பற்றித்தான் கனவு கண்டார்கள். அந்தத் **தமிழீழம் ஏகாதிபத்திய தேசிய ஒடுக்குமுறை நிறைந்த தமிழீழம் என்பதை புலிகள் புரியாமல் இல்லை.** புலிகள் பேசிய **சோசலிச தமிழீழம்** இதுதான்.

இதனால்தான் ஏகாதிபத்திய நாடுகள் முன்வைக்கும் சமாதான சகவாழ்வு சமரச திட்டத்தை ஏற்க வேண்டிய நிலைக்கு புலிகள் வந்திருக்கிறார்கள். தள்ளப்பட்டிருக்கிறார்கள். உள்நாட்டு யுத்தத்தில் தீர்மானகரமான வெற்றி களை பெற்ற போதும், தங்களின் கட்டுப்பாட்டு பகுதியை விரிவாக்கி தக்க வைத்திருந்தும், புலிகள் தாங்களே முன்னிறுத்தி வந்த தனித் தமிழீழ இலட்சியத்தை, சுயநிர்ணய உரிமையை கைவிட்டு **'பிரேதச சுயாட்சி'** தீர்வுக்கு தயாராகி இருக்கிறார்கள்.

**ஓயாத** அலை இராணுவ வெற்றியை - ஆனையிறவு இராணுவ முகாம்வீழ்ச்சியை புலிகள் மிகவும் கொண்டாடினர். புலிகளின்

www.tamilarangam.net

இராணுவ கட்டமைப்பு வளர்ச்சி, போர் முறைத்திறன், மரபுவழி இராணுவப் போரின் வெற்றி என ஆய்வுகளும் பிரச்சாரங்களும் வெளிவந்தன. இது நடந்த உண்மைதான். சிறீலங்கா அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டம், யுத்தமாக மாறியதில் இருந்து **இனஒடுக்குமுறை எதிர்ப்பு யுத்தத்தில் ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தில்,** இது புலிகளின் மிகப் பெரிய இராணுவ வெற்றி என்பதில் எள்ளளவும் யாரும் சந்தேகப்பட முடியாது.

ஆனால், புலிகள் வழமைபோல் தங்களின் ஒவ்வொரு இராணுவ வெற்றிகளின் பின்னும் தமிழீழப் பகுதி முழுவதையும் இன்னும் சில நாட்களில் கைப்பற்றி விடுவோம். **தமிழீழ அரசு அடுத்த பொங்கலுக்கும், தீபாவளிக்கும், மாவீரர் தினத்துக்கும் இடையில் உருவாகிவிடும்** என்ற பிரம்மைப் பிரச்சாரத்தை செய்து வந்தனர். கொழும்பு விமான நிலைய தாக்குதல் - ஓயாத அலை இராணுவ வெற்றிக்குப் பின் இப்பிரச்சாரம் மிகவும் சூடாக தொடர்ந்து செய்யப்பட்டது.

**அமெரிக்கா** தலைமையிலான அன்னிய நாடுகளின் திட்டம் நிர்பந்தம் மூலமாக, **நோர்வே** அரசின் முயற்சியில் உருவான **"யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தைகளை"** கூட, புலிகள் முழுக்க முழுக்க தங்களின் அரசியல் வெற்றிகளாக காட்டி வருகின்றனர். **'ஆயுதங்களை கீழே போட்டால்தான் பேச்சுவார்த்தை'** என்ற சிறீலங்கா அரசின் நிபந்தனைகளை, 'புலிகள்' தமிழ்ப்பயங்கர வாதிகள்', ஆயுத ஒப்படைப்பு செய்வதன் மூலமாகத்தான் - புலிகள் அதிகாரத்தில் பங்கு கொள்ளமுடியும் என்ற இந்தியாவின் 1987 நிபந்தனைகளை மீறி, **இன்று** புலிகளின் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதி அதிகாரத்தை அங்கீகரித்து, அரசு கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகளின் அரசியல் நடவடிக்கைகளை, சிவில் அதிகார நிறுவனங்களை அனுமதித்துக் கொண்டு, சிறீலங்கா அரசுப் பிரதிநிதிகளுடன் சமமாக உள்நாட்டிலும் - உலகளவிலும் உட்கார்ந்து பேச முடிகிறது. காரணம் புலிகளை இராணுவ ரீதியாக அழிக்க முடியாது. புலிகளின் இராணுவ வளர்ச்சியை தடுத்து

நிறுத்த முடியாது என்பதை உள்நாட்டு- உலக எதிரிகள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் பிரச்சனை தமிழீழ தேசிய சுதந்திரப் போராட்டம். தமிழீழ மக்களின் அரசியல் இலட்சியங்கள், இவை புலிகள் நினைப்பது போல் இலகுவாக தீர்த்துவிடக் கூடியதல்ல. புலிகள் தங்களின் **இராணுவ வெற்றிகளை மட்டும்** கொண்டு தேசிய இனப்பிரச்சனையை, தேசிய விடுதலையை சாதிக்கமுடியும் என நம்பினர் - நம்புகின்றனர். தங்களின் மரபு ரீதியான இராணுவ வெற்றிகளை, எதிரிகளின் கோட்டைகளை கண் இமைக்கும் நேரத்தில் கரும்புலித் தாக்குதலில் நொறுக்கும் தற்கொலைத் தாக்குதல் வெற்றிகளை பார்த்து உள்நாட்டு எதிரிகளும் - உலக எதிரிகளும் கீழ் இறங்கி வந்து, **தமிழீழ மக்களின் அரசியல் இலட்சியத்தை அங்கீகரித்து விடுவார்கள்.** இந்த இராணுவ வெற்றிகளை ஈட்டும் புலிகளின் கைகளில் தமிழீழத்தின் முழு அதிகாரங்களையும் கொடுப்பார்கள் என நம்பினர் - பிரச்சாரப் படுத்தினர். இதனால் தான் **"தமிழீழ மக்களின் தாகம்; தமிழீழ தாகம்"** என இலட்சியம் பேசாமல் **"புலிகளின் தாகம் தமிழீழ தாகம்"** என இலட்சியம் பேசினர். போகின்றனர்.

புலிகளை தடைசெய்த அமெரிக்காவும், பிரிட்டனும் மற்றும் ஏகாதிபத்திய நாடுகளும் புலிகள் **மீதான தடையை** நீக்காமல், தமிழ்ப் பகுதிகளுக்கு புனரமைப்பு நிதி வழங்கும் நாடுகளின் நோர்வே **'ஒஸ்லோ'** கூட்டத்தில் புலிகள் பங்கு கொண்டனர். சிறீலங்கா அரசிடம் தடைநீக்கக் கோரி வெற்றி கண்ட புலிகள் - தடைநீக்கிய பின்தான் பேச உட்கார்ந்த புலிகள், ஏகாதிபத்திய நாடுகள் தடையை நீக்காமலே பேச அழைத்ததும், தங்களை தடைசெய்த உலக நாடுகளே தங்களை அங்கீகரிக்கும் நிலைக்குக் கீழ் இறங்கி வந்துவிட்டதாக ஏமாற்றுப் பிரச்சாரம் செய்தனர்., செய்கின்றனர். **'ஏகாதி பத்திய இராஜதந்திரத்தை'** புரியாது தங்களை உலக நாடுகள் அங்கீகரித்து விட்டதாக

புளகாங்கிதம் அடைகிறார்கள். புலிகளின் உள்நாட்டு - உலக பிரச்சாரப் பீரங்கிகள் கண் - மண் தெரியாமல் கதைவிடுகிறார்கள்.

**இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில், தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உண்மையான அக்கறையுள்ளவர் கள் அறிவு பூர்வமாக - நேர்மையாக சிந்திக்க வேண்டிய முக்கிய வரலாற்றுத் தருணம் இது.**

இன்று நடந்து கொண்டிருக்கும் ஓராண்டு கால யுத்த நிறுத்தம் - பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வுக்கான செயற்பாடுகளில், தங்களின் **அரசியல் நிலைப்பாடுகளை - இலட்சியங்களை கைவிட்டு கீழ் இறங்கி வந்திருப் பது புலிகளா?** - சிறீலங்கா அரசா? ஏகாதிபத்திய தேசிய ஒடுக்குமுறை அரசுகளா?

சிறீலங்கா இனவாத அரசின், இன - மத ஒடுக்குமுறை கூர்மையடைந்து தமிழ் இன அழிப்பு, தமிழ்த் தேசிய இனத்தின வாழ்வை கேள்விக்குள்ளாக்கிய போது, தேசிய இனத்தின் அடிப்படை சனநாயக உரிமைக்கான வன்முறை அற்ற- ஒற்றை யாட்சி முறைக்குள் தீர்வு கோரிய மக்கள் போராட்டங்கள், அரசால் வன்முறை வழியில் நசுக்கப்பட்டது. தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான (பிரிந்து செல்வதற்கானதல்ல) மக்கள் போராட்டங்கள் ஆயுதப்படைகளின் - இனவெறிக்குண்டர் படைகளின் வன்முறை மூலம் நசுக்கப்பட்டது. இனப்படு கொலைகள் நிகழ்த்தப்பட்டன. தமிழர்களின் **"சுயாட்சி, சமஷ்டி"** அரசியல் அதிகாரக் கோரிக்கைகள் கூட பயனற்றுப் போனது. ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டது.

தமிழ்த் தேசிய இனம் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பிரிந்து சென்று தனியரசு, **தமிழீழத் தனியரசு** நிறுவுவதற்கான அரசியல் போராட்டங்களாக வளர்ந்தது. வன்முறை இல்லாத வழியிலான தமிழ் மக்களின் அகிம்சைப் போராட்டங்கள், ஆயுதப் படைகளின் வன்முறையில் தொடர்ந்து அடக்கி ஒடுக்கப்பட்டது. தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப்போராட்டம், திட்டவட்டமான வரலாற்றுச் சூழ்நிலைமையில் பிரிந்து சென்று

தனியரசு அமைக்கும் போராட்டமாக - ஆயுதம் தாங்கிய போராட்ட மாக வளர்ந்தது,

தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப் பட்டு, சிங்கள தேசிய இனத்துக்குள்ள அத்தனை அரசியல் அதிகாரங்களும் தமிழ்த் தேசிய இனம் பெற்றுக் கொள்ள வேண்டும் அப்போது சிங்கள - தமிழ் தேசிய இனங்கள் சுயநிர்ணய உரிமை யுடன், சம அந்தஸ்துடன் ஒன்றுபட்ட இறையாண்மையுள்ள இல்ங்கைக்குள் கூட்டாட்சி நடத்த முடியும். தனி நாடாக பிரிந்து செல்ல வேண்டியதில்லை என தொழிலாளிவர்க்க அரசியல் சக்திகள், கொம்யூனிஸ்டுக்கள் முன்வைத்தனர். ஆனால், தமிழ் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ அரசியல் சக்திகள், சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பிரிந்து சென்று **தனித் தமிழீழ அரசு** அமைக்கும் போராட்டம் தான் ஒரே ஒரு வழி என்றன. ஆயுதம் தாங்கிய போராட்டம் மட்டும்தான் ஒரே ஒரு போராட்ட வடிவம் என்றன.

பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் அரசியல் கோரிக் கையை ஒரே ஒரு தீர்வாக ஏற்றுக்கொள்ளாத, சுய நிர்ணய உரிமைக்கான அரசியல் கோரிக்கையைக் முன்னிறுத்திய **தமிழ் அரசியல் சக்திகள், "தமிழ் இனத் துரோக அரசியல் சக்திகள்"** என புலிகள் உள்ளிட்ட ஆயுதம் தாங்கிய இயக்கங்களால் அடையாளப் படுத்தப்பட்டது. ஆயுதப் போராட்டங்களில் உடனடியாக ஈடுபடாத மக்கள் போராட்டங்கள் நடாத்திய சக்திகள், புலிகளால் ஏளனம் செய்யப்பட்டது. இவை வரலாற்றில் நடந்த உண்மைகள்.

1985 திம்புப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட தமிழீழ விடுதலை இயக்கங்கள் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற் கான குறைந்தபட்சக் கோரிக்கைகளை முன்வைத்தன. பேச்சு வார்த்தையில், சமாதான முயற்சியில் J.R. அரசின் சமாதான பொய்முகம் கிழிக்கப்பட்டது. தமிழீழ விடுதலை இயக்கங்களின் **திம்புக் கோரிக்கை** உள்நாட்டுமக்களால் - உலக மக்களால் நியாயமானது என ஏற்றுக் கொள்ளப்பட்டதால், தமிழீழ தேசிய விடுதலை போராட்டம்-யுத்தம் தொடர்ந்து முன்னேறியது.

புலிகளின் தனி இயக்க சர்வாதிகார நடவடிக்கையால், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இருந்த மற்றய இயக்கங்கள் அழித்தொழிக்கப்பட்டது, தடை செய்யப்பட்டது. 1987 **இலங்கை - இந்திய ஒப்பந்தம்** தமிழ்த் தேசிய இனப் பிரச்சனைக்கு தீர்வாக, சிறீலங்காவின் ஒற்றையாட்சி முறைக்குள் **"மாகாண சுயாட்சி"** என்ற தீர்வை திணித்தது. **திம்புக் கோரிக்கை**களைக் கூட அரசியல் ரீதியில் அங்கீகரிக்கவில்லை.

இந்தியரசின் செல்வாக்குக்கு - ஆளுமைக்கு உட்பட்ட தமிழீழ விடுதலை இயக்கங்கள் அவ் ஒப்பந்தத்தை ஏற்றன. புலிகள் திம்புக் கோரிக்கைகளை முன்னிறுத்தி அவ் ஒப்பந்தத்தை முன்னதாக நிராகரிக்கவில்லை. இடைக்கால நிர்வாகத்தில் புலிகளின் அதிகாரம் - பங்கு தொடர்பான பிரச்சனையில் முரண் பட்டு - பின்னர் இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தமாக மாறியது. ஒப்பந்தம் புலிகளால் நிராகரிக்கப்பட்டது.

தமிழீழ புரட்சிகர தொழிலாளி வர்க்க அரசியல் சக்திகளும், தேசபக்த முற்போக்கு சக்திகளும் தான் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முன்கூட்டியே நிராகரித்தவர்கள், அரசியல் தீர்வுக்கான குறைந்தபட்ச கோரிக்கை **"திம்புக் கோரிக்கைகள்"** என்பதைத் தெளிவாக - உறுதியாக முன் வைத்தவர்கள். தேசிய இனப்பிரச்சனையை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கான தமிழீழ மக்களின் **குறைந்த பட்ச கோரிக்கை "திம்புக் கோரிக்கை"** என்பதையும் **உயர்ந்த பட்ச தீர்வு தனித்தமிழீழ அரசு** என்பதையும் தெளிவாக பிரச்சாரப் படுத்தி வந்தவர்கள் - வருகிறவர்கள். முன்னிறுத்தி போராடுகிறவர்கள்.

1987 ஒப்பந்தத்தை ஏற்று **"மாகாண சுயாட்சித் தீர்வை"** ஏற்றுக்கொண்ட இயக்கங்களை, அரசியல் கட்சிகளை புலிகள் **"தேசத் துரோகிகள்"** என்றனர். புலிகள் தங்களின் பழைய அழித் தொழிப்புக்களை சக இயக்கங்கள் மேலான தடையை - படுகொலைகளை நியாயப்படுத்தினர். **மற்றய ஆயுதப் போராட்ட இயக்கங்கள் பின்னாளில் துரோகம் செய்வார்கள்** என்பதை முன்

www.tamilarangam.net

கூட்டி புரிந்து அழித்ததாக புலிகளின் அரசியல் - இராணுவ தீர்க்க தரிசனத்தை பிரச்சாரப் படுத்தினர்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில், சுய நிர்ணய உரிமை என்றால் பிரிந்து சென்று தனித் தமிழீழ அரசு அமைப்பதுதான், ஒரே வழி எனப் பேசிய ஆயுதப் போராட்ட இயக்கங்களில் பெரும்பாலான இயக்கங்கள், **தனித் தமிழீழ கோரிக்கையை மட்டுமல்ல. சுய நிர்ணய உரிமைக் கோரிக்கை யையும் கைவிட்டன.** தமிழீழ மக்களுக்கும், தங்களின் இயக்கங் களில் இருந்து தமிழீழ தேச விடுதலைக்காக இரத்தம் சிந்திய போராளிகளுக்கும் இயக்க தலைமைகள் துரோகம் செய்தன. சிறீலங்காவின் ஒற்றையாட்சி முறைக்குள், நாடாளுமன்ற அதிகார நாற்காலிகள்தான் இவ் இயக்கத் தலைமைகளின் இலட்சியங்களாக (இலட்சமாக) மாறியுள்ளது.

சிறீலங்கா இனவாத அரசுக்கு எதிராக - தமிழீழ தேசிய இன விடுதலை யின் பக்கம் நின்று தொடர்ந்து போராடிக் கொண்டு - போர் புரிந்து கொண்டிருந்த புலிகள் இயக்கம். தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தில் இன ஒடுக்குமுறை எதிர்ப்பு யுத்தத்தில் பல இராணுவ வெற்றிகளையும் - தோல்விகளையும் சந்தித்திருக்கிறார்கள். சிறீலங்கா இராணுவத்தின், இந்திய இராணுவத்தின் உக்கிரமான ஆக்கிரமிப்பு அழிப்பு இராணுவ நடவடிக்கைகளின் போது **வாழ்வா - சாவா** என்ற நிலையில் இராணுவ ரீதியாக பின்வாங்கி, கட்டுப் பாட்டுப் பகுதிகளை எதிரிகளிடம் இழந்தபோதும், **அரசியல் இலட்சியத்தில் இருந்து பின்வாங்காத புலிகள் இயக்கம்,** தமிழீழ தேசிய இன விடுதலையில் உறுதியாக நின்றதால், தமிழீழ மக்களின் ஆதரவில், மீண்டும் தங்களை தயார்படுத்திவந்த புலிகள் இயக்கம் ஒயாத அலை இராணுவ வெற்றிக்கு பின், தங்களின் கட்டுப்பாட்டு பகுதியை விஸ்தரித்த நிலையில், தங்களை ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தில் பலப்படுத்திக் கொண்ட நிலையில், **சிறீலங்காவின் ஒற்றையாட்சி முறைக்குள் அரசியல் தீர்வை சமாதனத்தை தேடும் நிலைக்கு ஏன் கீழ் இறங்கி இருக்கிறார்**

**கள்?** 'மாகாண சுயாட்சியை' 1987-இல் ஏற்க்க மறுத்த புலிகள், **ஏன் இன்று 'பிரதேச சுயாட்சி' என்ற மட்டத்துக்குக் கீழ் இறங்கி இருக்கிறார்கள்?**

தமிழீழ தேசிய விடுதலைக்காக-சுயநிர்ணய உரிமையை அடைவதற் காக, தமிழீழ மக்களும், மாவீரர்களும், மற்றய இயக்க போராளிகளும் செய்த தியாகங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அவர்களின் இலட்சிய கனவுகளை ஏகாதிபத்தியங்களின் காலடியில் போட்டுவிட முயற்சி நடக்கிறது. தமிழ்த்தரகு முதலாளித்துவ சக்திகளின் நலனுக்காக, தமிழீழ தேசிய விடுதலை காட்டிக் கொடுக்கப் படுகிறது. தமிழீழ மக்கள் மத்தியிலுள்ள தொழிலாளிகள், விவசாயிகள், நடுத்தரவர்க்கத்தினர், தேசிய முதலாளிகள், ஆண்கள்-பெண்கள் என அனைவரும் சுதந்திரமான சமூக பொருளாதார வாழ்வை, அன்னிய தேசிய ஒடுக்குமுறை அற்ற தமிழீழ தேசிய சுதந்தரத்தை-விடுதலையை அடைவதற் காக கடந்த 25 ஆண்டுகளாக அவர்கள் செய்து வந்த அர்ப்பணிப்பு ஏகாதிபத்திய உலகமயமாக்கல் முறைக்கு விற்கப்படுகிறது.

பிரித்தானிய கொலனிய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டத்தில் சிங்கள தமிழ் தரகு முதலாளித்துவ சக்திகள், தங்களின் அரசியல் அதிகார நலனுக்காக இலங்கை நாட்டையும், மக்களின் போராட்டங்களையும் தியாகங்களையும் ஏகாதிபத்தியங் களுக்கு காட்டிக் கொடுத்து நாட்டையும் - மக்களையும் ஏமாற்றினார்கள் சுதந்திரத்தை விலைபேசி விற்றார்கள். தமிழீழ மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் தமிழ்த் தரகு முதலாளித்து சக்திகள், தேசத்தை, மக்களின் போராட்டத்தை மாவீரர்களின் தியாகத்தை, தேசத்தின் சுதந்திரத்தை ஏகாதிபத்திய புதுக் தேசிய கொலனிய முறைக்கு விட்டுக் கொடுக்க தயாரா கிறார்கள். மீண்டும் மீண்டும் மக்களும் - தேசமும் ஏமாறக்கூடாது.

தமிழீழ மக்கள் மத்தியிலுள்ள, **புதிய சனநாயக வர்க்கங் களில் உள்ள புரட்சிகர தேசபக்த சக்திகள்,** தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து முன்னேடுத்து

செல்வார்கள். தமிழ் முசுலிம், மலையக மக்களின் **'சுயாட்சி'**க்காக தொடர்ந்து போராடுவார்கள். சுயநிர்ணய உரிமையுள்ள அன்னியத் தேசிய ஒடுக்குமுறை இல்லாத சுதந்திர தமிழீழத்தை உருவாக்க தொடர்ந்து போராடுவார்கள். சுதந்திரமான இறைமையுள்ள தனியான **தமிழீழ புதிய சனநாயக அரசை உருவாக்குவர்.** இல்லையெனில் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுதந்திரமான தமிழீழமும், சுதந்திரமான சிறீலங்காவும் இணைந்த **இலங்கை புதிய சனநாய கூட்டரசை நிறுவுவார்கள்.** தமிழீழ புரட்சிகர தொழிலாளி வர்க்கம் , புரட்சிகர தேசபக்த இயக்கம் இந்த அரசியல் இலட்சியத்தில் இருந்து என்றும் பின்வாங்க போவதில்லை.

புலிகள் தமிழீழ தேசிய விடுதலைப் போரை - போராட்டத்தை கைவிட்டு சிறீலங்கா அரசுடன் ஏகாதிபத்தியங்களுடன் சமரசப் படலாம். சமரசதிட்டத்தின் எல்லைக்குள் தங்களின் அதிகாரங் களை நிறுவலாம். சமரசப்படுத்துவதன் மூலம் தேசிய விடுதலை யுத்தம் இன ஒடுக்குமுறை எதிர்ப்பு யுத்தம் - தற்காலி கமாக நிறுத்தப்படலாம். ஆனால், தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம். ஏகாதிபத்திய புதுக் கொலனிய தேசிய ஒடுக்கு முறைக்கு, இன ஒடுக்குமுறைக்கு எதிராக புதிய பரிமாணங் களுடன் தொடர்வதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. ஏகாதிபத்திய உலக மயமாக்கலுக்கும் உள்நாட்டு ஏகாதிபத்திய கூட்டணிகளுக்கும், அரசுக்கும் எதிரான புரட்சிகர மக்கள் போராட்டங்கள் தினம் தினம் வெடிக்கும். இறுதி இலட்சியம் வரை தினம் தினம் முன்னேறும்.

**- ஆசிரியர் குழு**

# தாய்லாந்து - நோர்வே - யப்பான் பேச்சுவார்த்தையின் அடித்தளம்

**சி**றீலங்கா இனவாத அரசுக்கு எதிரான தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம், யுத்தம் (இன ஒடுக்குமுறை யுத்தம் - இன ஒடுக்குமுறை எதிர்ப்பு யுத்தம்) என்ற நிலைக்கு வளர்ந்த பின்னர், போர் பிரதான நிகழ்ச்சி நிரலாக போராட்டத்தில் வெளிப்பட்ட பின், போரில், இராணுவ நடவடிக்கைகளின் வெற்றிகள் - தோல்விகள் கூட ஒட்டுமொத்த போராட் டத்தின் அரசியல் நிலமைகளை மாற்றியமைக்கும் சக்தி பெற்றவை. **அரசியலுக்கும் - இராணுவத்துக்குமான உறவு அவ்வளவு ஆழமானது.**

1987-இல் சிறீலங்கா இராணுவத்தின் **ஒப்பறேசன் லிபறேசன்** அதனை, தொடர்ந்து இந்தியரசு நேரடியாக தலையிட்டு ஒரு மாற்றம் போராட்டத்தில் ஏற்பட்டது. 1995-ல் சிறீலங்கா இராணுவத்தின் **ஒப்பறேசன் சூரியக்கதிர்** யாழ்ப்பாணத்தை 5 ஆண்டுகள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த புலிகளை முழுமையாக வன்னிக்கு பின்வாங்கவைத்தது. சிறீலங்கா அரசையும்-புலி களையும் சமரசப்படுத்தமுயன்ற நோர்வேயின் முதல் முயற்சி தோற்றுப் போனது. 2000-ல் புலிகளின் **ஓயாத அலை இராணுவ நடவடிக்கை** ஆனையிறவு முகாமை கைப்பற்றியதுடன், யாழ்ப் பாணத்தை மீண்டும் புலிகள் கைப்பற்ற முயன்ற இராணுவ முன்னேறுதலை இந்தியா உட்பட ஏகாதிபத்திய நாடுகள், புலிகளை அழுத்தி அச்சுறுத்தி நிறுத்தின. ஏகாதிபத்திய நாடுகள் சிறீலங்கா அரசையும் - புலிகளையும் அழுத்தி சமரசப்படுத்த பேச வைக் கின்றன.

www.tamilarangam.net

அய்ரோப்பிய-அமெரிக்க ஆதிக்க அரசுகளின், உலக முதலாளித்துவ முறையின் நலன்காக்கும் **உலக சமாதான தூதன் நோர்வே அரசு.** இந்தியரசின் ஆதரவுடன், புலிகளையும்-சிறீலங்கா அரசையும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வைத்தது, யுத்த நிறுத்த கண்காணிப்புகுழு நிறுவப்பட்டது. சிறீலங்காவின் ஒற்றை ஆட்சி அமைப்பு முறைக்குள் இரண்டு தரப்பையும் ஒரு இணக்கப்பாட்டுள் கொண்டுவதற்கான அழுத்தங்களை இரண்டு தரப்புக்கும் அன்னியநாடுகள் கொடுக்கின்றன. இந்த திட்டமிட்ட-ஒழுங்கமைக்கப்பட்ட உலக அழுத்தத்தின் மூலம் சிறீலங்கா அரசும்-புலிகளும் சரிசமமாக உட்கார்ந்து கௌரவத்துடன் **தாய்லாந்தில்** பேச ஆவண செய்யப்பட்டது. நோர்வே அரசு வழியாக அய்ரோப்பிய-அமெரிக்க அரசுகள் வழங்கும் வழிகாட்டுதல்களை புலிகளும்-சிறீலங்கா அரசும் மிக மரியாதையான முறையில் உள்வாங்கிக் கொண்டு வருகிறார்கள்.

இலங்கையில் யுத்த நிறுத்தம். பேச்சுவார்த்தை. அரசியல் தீர்வு, சமாதானம் குறித்த ஏகாதிபத்திய நாடுகளின் வழிகாட்டுதல் களை-அழுத்தங்களை, சிறீலங்காவில்-தமிழீழப் பகுதியில் உள்ள அரசியல் சக்திகள், தெற்காசியாவில் இவற்றுக்கு உதவக்கூடிய அரசுகள்-கட்சிகள் வெளிப்படையாக விமர்சிக்காதபடி, இராஜ தந்திர சூழ்ச்சிகள் மூலம் குலைக்காதபடி கவனமாக பார்த்துக் கொள்ளப்படுகிறது, தெற்காசிய நாடுகளில் உள்ள ஏகாதிபத்திய நாடுகளின், மேற்குலகின் அரசியல்-இராணுவ இராஜதந்திரிகள் அழுத்தக்குழு தலைவர்கள் இதை கவனமாக கண்காணித்து வருகின்றனர்.

தாய்லாந்து முதல் சுற்றுப்பேச்சில் **இடைக்கால நிர்வாகம்** பற்றி முதலில் பேசுவதாக இருந்தது. ஆனால் சிறீலங்காவில் சனாதிபதிக்கும் பிரதமருக்கும், ஆளுங்கட்சிக்கும் - எதிர்க் கட்சிக்கும் இடையில் நடக்கும் பனிப்போர், 19வது அரசியல் சாசனதிருத்தம் தொடர்பான தோல்வி, பேச்சுவார்த்தையில் எட்டப்படும் தீர்வுகளை அரசியல் சாசன ரீதியில் அங்கீகரிக்க

www.tamilarangam.net

வைப்பதில், அமுல்ப்படுத்துவதில் உள்ள அதிகாரங்களில், பாராளுமன்றத்துக்கும், சனாதிபதிக்கும் உள்ள அதிகார உரிமைகளால் ஏற்படக்கூடிய சிக்கல்களை நுணுக்கமாக புரிந்து கொண்ட **நோர்வே சமாதான ஆய்வுக்குழு**, சாதுரியமாக இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சை பேச்சுவார்த்தையில் தவிர்த்தது.

தாய்லாந்தில் இரண்டாம் சுற்று பேச்சுவார்த்தையில் மூன்று வகையான செயலணிக்குழுக்கள் உருவாக்கப்பட்டது. நோர்வே அரசு வழியாக அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய முகாம் வழங்கும் '**சமரசதிட்டத்தை**' சிறீலங்கா அரசும்-புலிகளும் தார்மீக ரீதியாக மீறமுடியாத படி, இரண்டு தரப்பின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளை கொண்டதாக செயலணிக்குழுக்கள் நிறுவப்பட்டன. இவ்அதிகாரபூர்வ குழுவுக்குதான் செயலணிக்குழுக்கள் கட்டுப்பட்டது. இக்குழுக்கள் சிறீலங்கா சனாதிபதிக்கோ, பிரதமருக்கோ, பாராளுமன்றத்துக்கோ கட்டுப்பட்டதல்ல.

**மீள் குடியேற்றம் புனர்வாழ்வு புனரமைப்பு குழு.**
**உயர்பாதுகாப்பு வலையப் பிரச்சனைகளை கவனிக்கும் குழு.**
**அடிப்படைப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான அரசியல் குழு.**

இந்த இரண்டாவது சுற்றுப் பேச்சில் புலிகளும்-சிறீலங்கா அரசும் எந்தளவுக்கு ஏகாதிபத்திய முகாமின் சமரசதிட்டத்தை ஏற்று அமுல்படுத்த தயாராக இருக்கிறார்கள் என்பது பரிசோதிக்கப்பட்டது. இந்தப் பரிசோதனையின் முடிவுகளைப் பொறுத்தே இரண்டுதரப்புக்கும் நிதி உதவி வழங்கும் நாடுகளின் சிறிய கூட்டத்தின் நாள் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இக்கூட்டம் கூட நோர்வே தலைநகரில்தான் கூடியது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அரசு-புலிகள் தரப்பு பிரதிநிதிகள், நிதி வழங்கும் அய்ரோப்பிய ஒன்றியம் உட்பட 23 நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் தங்களின் பொருளாதார, அரசியல் கோரிக்கைகளை முன்வைத்தனர், நிதி ஏற்றுமதி நாடுகளின் சமாதான-அமைதி திட்டத்துக்கு உத்தரவாதம் அளித்தனர்.

2500 கோடி ரூபா புனரமைப்புக்கான மொத்த எதிர்பார்ப்பு என முன் வைத்தனர். ஆனால், 350 கோடி ரூபா உதவியை மட்டும் இக்கூட்டம் அனுமதித்தது.

இந்தியரசு, நோர்வே அரசின் இலங்கை மீதான சமரசமுயற்சி களை ஆதரித்து வந்தாலும், புலிகள் மீதான தனது அணுகு முறையில் ஒரு அழுத்தத்தை தொடர்ந்து பிரயோகித்துவருகிறது, புலிகள் தங்களது கட்டுப்பாட்டுப் பகுதியில் சுதந்திரமாக தங்களின் அரசியல்-இராணுவ தயாரிப்புக்களில் ஈடுபடுவதையுடம், சிறீலங்கா அரசு வசம் உள்ள தமிழீழ பகுதிகளில் சுதந்திரமாக அரசியல் வேலை செய்வதையும், சிறீலங்கா அரசும், மேற்குலகமும் அங்கீ கரித்திருக்கின்றது.

மாலத்தீவு வழியாக புலிகளின் தலைவர்கள் வான்வழியாக சென்று வந்தனர். ஆனால், அன்டன் பாலசிங்கம் இந்தியாவில் தங்கி மருத்துவ சிகிச்சை பெறும் புலிகளின் 'மருத்துவ இராஜதந்திர' முயற்சியை இந்தியா அனுமதிக்க வில்லை, புலிகளோ, புலிகளுக்கு நெருக்கமான இந்திய ஆதரவாளர்களோ இந்த யுத்த நிறுத்த சமாதான பேச்சுவார்த்தை காலத்தை பயன்படுத்தி புலி ஆதரவு அரசியலை வளர்க்க சிறிதும் அனுமதிக்க கூடாது என்பதில் கண்டிப்புடன் நடந்து கொள்கிறது. மத்திய அரசின் கூட்டணிக் கட்சியான ம.தி.மு.கவின் பொதுச் செயலாளர் **வை.கோ** முதல் **நெடுமாறன், சுபவீ, நஞ்சையப்பன், பாவாணன்** வரை "புலிகளுக்கு ஆதரவாக பேசினார்கள்" என்பதைக் காட்டி பொடா சட்டத்துக்குள் அடைத்து வைத்துள்ளது. அகதி முகாம்கள் கடுமையாக கண் காணிக்கப்படுகிறது. அந்தளவுக்கு தமிழீழ-புலி ஆதரவாளர்களை பயமுறுத்தி வைத்துள்ளது. இந்திய மத்திய-மாநில அரசுகள்.

நோர்வேயில் நடந்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத் திற்கு சிறீலங்கா அரசுப் பிரதிநிதிகள் நேரடியாக சென்று அழைப்பு விடுத்தபோதும், இந்தியா அதிகாரபூர்வமாக கலந்துகொள்ள வில்லை, இது சிறீலங்காவிலுள்ள அரசியல் கட்சிகள். அதிகாரவர்க்கத்தினர் மத்தியில் சர்ச்சையை கிளப்பிவிட்டுள்ளது.

www.tamilarangam.net

உலகநாடுகள், உலகநிறுவனங்கள் என எல்லாம் அமெரிக்க முகாம், ரசியமுகாம் என பிளவுண்டு இருந்தபோது இருமுகாம் களுடனும் உறவு வைத்துக்கொண்டு ஆனால், ரசிய முகாமை பெரும்பாலான உலக விவகாரங்களில் ஆதரித்துக் கொண்டிருந்த இந்தியரசு. 1990-கள் வரை தெற்காசிய, உலக விவகாரங்களில் அனுகியமுறை, தலையிட்டமுறை ஒருவகையானது. ரசியமுகாம் நொருங்கி அமெரிக்கமுகாம் ஏகாதிபத்திய ஒற்றை ஆதிக்கத்தை பெற்றபின், இந்தியரசு திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு தன்னை முழுமையாக திறந்து விட்டபின், அமெரிக்க ஏகாதிபத்திய முகாமுடன் வெளிப்படையாக முரண்படாது தெற்காசியாவில் தனது விரிவாதிக்க நலன்களை பாதுகாக்கும் கொள்கையை கடைப் பிடிக்கிறது.

ஓயாத அலை இராணுவ நடவடிக்கையின் போது நெருக்கடிக் குள்ளான சிறீலங்கா இராணுவத்துக்கு 1000 கோடி ரூபா உதவி வழங்கியது. ஆனால், சிறீலங்கா அரசும்-புலிகளும் கூட்டாக யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை புனரமைப்பு செய்ய நிதி உதவி கோரிய நோர்வேக் கூட்டத்தில் இந்தியரசு கலந்து கொள்ளவில்லை. நாம் ஒன்றை தெளிவாக பார்க்க வேண்டும்; இலங்கையின் தரகு முதலாளிகளில், சிங்கள, தமிழ், முசுலிம் முதலாளிகள் மட்டும் இல்லை. இந்தியாவின், பனியா-மார்வாடி, தமிழ் முதலாளிகளின் மூலதனங்கள் குறிப்பிடக்கூடியளவுக்கு தீர்மானகரமாகவுள்ளன. இந்திய தரகு முதலாளிகளின் நலனுக்காகவே இந்தியரசு. சிறீலங்கா அரசுக்கு எதிராக 1980-களில் தமிழீழபோராளி இயக்கங்களுக்கு உதவி, அரசுக்கு நெருக்கடியை கொடுத்தது, சிறீலங்கா அரசை வழிக்கு கொண்டு வந்தபின், தழிழீழ பேராளி இயக்கங்களை நசுக்கத் தொடங்கியது. இலங்கையின் தமிழ் தரகு முதலாளித்துவ கட்சிகள் - இயக்கங்கள் தமிழ்நாட்டு தரகு முதலாளிகளின் - இந்தியரசின் நலன்களுக் காவும் நிற்பதன் வர்க்கப் பின்னணி இதுதான்.

இந்தியாவின் மிகப்பெரிய இரண்டு அரச எண்ணெய் நிறுவனங்கள் (இன்றோ நாளையோ தனியார் மயமாகப்

போகின்றது) இந்துஸ்தான் பெற்றோலிய நிறுவம் (HPCL), பாரத பெற்றோலிய நிறுவனம் (BPCL) திருகோணமலையின் எண்ணெய்க் குதங்களை நீண்டகால குத்தகைக்கு பெற்றிருக்கிறது. இலங்கை முழுவதற்கும் எரிவாயு விற்பனை உரிமையை பெற்றிருக் கின்றது. மோட்டார் வாகன விற்பனையில் டாட்டா, பிர்லா, மாருதி நிறுவனங்கள் இலங்கையின் சந்தையை கைப்பற்றிவருகிறது. 20 கோடி டொலர் கடனாக கொடுத்துள்ள இந்தியரசு இலங்கையின் 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சொகுசு வாகன (55 கோடி) விற்பனையை கைப்பற்றியுள்ளது. பதப்படுத்தப்பட்ட உணவு உற்பத்தியில் கர்நாடக மாநிலத்தின் நிறுவனங்கள் கூட்டு முதலீடுகளை செய்து வருகின்றன.

இந்தியாவின் வெளிநாட்டு அமைச்சர் அண்மையில் இந்திய வெளியுறவுத் துறை அதிகாரிகள் (IFS) மத்தியில் இந்தியா இனி **“பொருளாதார இராஜதந்திரத்திற்கு”** அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியுள்ளது. என கூறியுள்ளார். இவை அண்மிய செய்தி. இலங்கையின் புனர்வாழ்வுக்கு உதவி செய்வதை விட இலங்கையின் மீதான பொருளாதார முதலீட்டில் இந்தியரசு கூடுதல் அக்கறை காட்டி வருவதே உண்மை.

இந்தியாவின் எய்ட்ஸ் நிவாரண நிதிக்காக அமெரிக்காவின் பில்கேட்ஸ் 500 மில்லியன் ரூபா உதவி வழங்கினார். ஆனால், இந்தியரசு தென்கிழக்காசிய நாடுகளில் (ASEAN) சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை உருவாக்க, கம்போடி பொருளாதார நெருக்கடிக்கு 100 மில்லியன் டொலர் உதவி வழங்கியது. சிங்கப்பூருடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்ய முயல்கிறது. இந்தியா-சிறீலங்கா இரண்டும் சார்க் (SAARc) அமைப்புக்கு வெளியில் (ASEAN) அமைப்பிலும் அதிக அக்கறை காட்டுகின்றன. இன்றய உலக மூலதன ஏற்றுமதி - இறக்குமதி பொருளாதாரமுறையை புனரமைப்பு - புனர்வாழ்வு நிதி உதவி முறையை நுணுக்கமாக நாம் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தை **நோர்வே** தலைநகர் ஒஸ்லோவில் நடக்கிறது. நான்காம், அய்ந்தாம் சுற்றுப்

பேச்சுவார்த்தை மீண்டும் தாய்லாந்திலும் ஆறாவது இறுதிச் சுற்று பேச்சு வார்த்தை யப்பானிலும் நடக்கப் போகிறது. தொடர்ந்து புலிகளும் - அரசும் ஏகாதிபத்திய உலக பொருளாதார சுரண்டல் முறைக்கு, உகந்த முறையில், ஏகாதிபத்திய நாடுகளின் உலக மயமான சமாதான கொள்கைக்கு - அமைதிக்கு - இசைவான சமரச முயற்சிகளில் ஈடுபடுகிறார்களா என்பது கவனிக்கப்படும். வழிகாட்டப்படும். இதன் மதிப்பீட்டை பொறுத்து 2003 பங்குனியில் (March) யப்பான் தலைநகர் ரோக்கியோவில் (Tokyo) கூடும் இரண்டு தரப்புக்கும் நிதி ஏற்றுமதி (உதவி) செய்யும் நாடுகளின் பெரிய கூட்டம் புனர் வாழ்வு - புனரமைப்பு நிதியின் ஏற்றுமதி அளவை தீர்மானிக்கும். இரண்டு தரப்பும் சிறீலங்கா ஒற்றையாட்சி அரசமைப்புகள் கௌரவமாக சமரசப்பட்டுக் கொண்டால் ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்தி பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி இருக்கும் சிறீலங்கா அரசின் கட்டுப்பாட்டு பகுதிக்கும், ஆக்கிரமிப்பு யுத்தத்தில் அழிந்து போயிருக்கும் தமிழீழ பகுதிக்கும் ஏகாதிபத்திய நாடுகளின், உலகநிதி நிறுவனங்களின், பல்தேசிய கொம்பனிகளின் தொழில், வணிக நிதிகள் தாராளமாக ஏற்றுமதி செய்யப்படும், உலகமயமாக்கல் முறை உறுதியாக கடைப்பிடிக்கப்படும் ஏகாதிபத்திய புதுக்கொலனிய தேசிய ஒடுக்குமுறை மறு உருவாக்கம் பெறும்.

ஆயுத வியாபாரத்துக்காக யுத்தங்களை ஊக்குவிக்கும் ஆயுத உற்பத்தி கொம்பனிகள், அரசுகள். மக்களின் யுத்தப் புனர் வாழ்வுக்கும் நிதிகளை வழங்குகின்றன. உள்நாட்டு யுத்தம் இல்லாத புதுக்கொலனிய நாடுகளில் திறந்த பொருளாதாரம், நவீனமயம், தனியார் மயம், தாராளமயம், உலக மயம் போன்ற பொருளாதாரக் கொள்கை மூலம் அந்நாடுகளின் வளங்களை, மக்களின் உழைப்பை ஒட்டச் சுரண்டி கொள்ளையடிக்கின்றன. இந்நாடுகளின் சுதேசித் தொழில்கள், நிதித் தொழில்கள், வணிகம் என்பன நசிந்து அழிகின்றன. மக்கள் போராடிப் பெற்ற சமூக நலம், தொழில் நலம் சார்ந்த சமூக உதவிகள் நிறுத்தப்படுகின்றன.

ஏகாதிபத்திய நாடுகள் உள்நாட்டு யுத்தம் நடக்கும் புதுக்கொலனிய நாடுகளில் யுத்த அழிவுகளுக்கு உதவுவதாக கூறி

**புனரமைப்பு புனர் வாழ்வுக்கு நிதி உதவி வழங்கி** படிப்படியாக அந்நாடுகளை தங்களின் பொருளாதார சுரண்டலுக்கான வேட்டை காடுகளாக மீண்டும் மாற்றுகின்றன. இன்றைய உதவி நாளைய ஏகாதிபத்திய உலக சுரண்டலுக்கான அடித்தளம். ஆப்கான் மீது ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்திய அமெரிக்கா தலைமையிலான கூட்டணி நாடுகள் ஆப்கானில் **2வது மார்சல் பொருளாதார திட்டத்தை** முன் வைத்துள்ளதாக கூறுகின்றன. ஆப்கான் புனர்வாழ்வுக்கு அள்ளி வழங்கும் ஏகாதிபத்தியங்கள் ஈராக். மீது **"எண்ணெய்க்கு பதிலாக உணவு"** என்ற ஐ.நா.சபை உணவு தடையை பயன்படுத்தி ஈராக் மக்களை உணவு மருந்து இன்றி படுகொலை செய்கிறது.

சொந்த நாட்டு மக்களுக்கு பேரளிவை மட்டுமல்ல. உலகமக்களுக்கே பேரளிவை ஏற்படுத்தும் அனைத்து வகை ஆயுதங்களையும் வைத்திருக்கும். அமெரிக்க-பிரித்தானிய ஏகாதிபத்தியங்கள் அந்நாசபையின் 1441 தீர்மானத்தை காட்டி ஈராக் மக்கள் மீது மீண்டும் ஒரு ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கு தயாராகின்றன. அணு ஆயுதங்களை உலகின் எந்த நாட்டின் மீதும் ஏவக்கூடிய ஏகாதிபத்தியங்கள். வடகொரியாவின் அணு உற்பத்தி மீது 1994ம் ஆண்டு ஒப்பந்தத்தை காட்டி மிரட்டுகின்றன.

அமெரிக்க-பிரித்தானிய ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கு எதிரான ஈராக் மக்களின் போராட்டத்துக்கு, பாலஸ்தீன மக்களின் போராட்டத்துக்கு, வடகொரிய மக்களின் போராட்டத்துக்கு தமிழீழ மக்கள் தங்கள் ஆதரவை தெரிவிக்க வேண்டியுள்ளது. உலக அரச பயங்கரவாதத்துக்கு எதிரான, யுத்த வெறிக்கு எதிரான உலக மக்களின் போராட்டங்களுடன் தமிழீழ மக்களும் கை கோர்க்க வேண்டும்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டமாக முன்னேடுக்க வேண்டும்.

- ***திலீபன்***

**தமிழீழ மக்களின் அடிப்படைக் கோரிக்கைகள் தாய்லாந்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும். தேசிய உரிமைகளை கைவிட்ட அரசியல் தீர்வு தமிழீழ மக்களை ஏமாற்றும் துரோக ஒப்பந்தம்.**

1. மூன்றாவது நாட்டின், சர்வதேச நிறுவனத்தின் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடப்பது, கண்காணிக்கப்படுவதற்கு அப்பால், எந்த மூன்றாவது நாட்டின் படைகளும், சர்வதேச நிறுவனங்களின் (அய்நா அமைதிப் படை...) ஆயுதம் தாங்கிய படைகளும் சரி, ஆயுதம் தாங்காத கண் காணிப்பு படைகளும் சரி உள்நாட்டுக்குள் தலையிடக்கூடாது.
2. திம்புக் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
3. சிறீலங்கா அரசு என்ற பெயர் மாற்றப்பட்டு இலங்கை அரசு எனப் பெயர் மீள சூட்டப்பட வேண்டும். இலங்கை அரசு எனப் பெயர் மீள சூட்டப்பட்ட வேண்டும். இலங்கையில், சிறீலங்கா - தமிழீழம் என இரண்டு மாநிலங்கள் உருவாக்கப் பட வேண்டும், தேசிய சமவுரிமையுள்ள மாநிலங்களின் ஒன்றியமான இலங்கை, ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில், நாட்டின் பாதுகாப்பு (அன்னிய ஆக்கிரமிப்பு எதிராக மட்டும்) நிதி, வெளியுறவுத்துறை தவிர மற்றைய அனைத்தும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.
4. எக்காரணம் கொண்டும் மாநில அரசை கலைக்கும் அதிகாரம், ஒன்றிய அரசுக்கு இருக்கக்கூடாது; ஒன்றிய அரசின் நியமனங்கள், பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் மாநில அரசுடன் ஆலோசிக்கப்பட்டு, ஒப்புதலுடன் அமுல்படுத்தப்பட வேண்டும்.

5. தமிழீழ மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் முஸ்லீம் மக்களுக்கு ஒரு 'சுயாட்சிப் பகுதி' ஏற்படுத்த வேண்டும். சுயாட்சிப் பகுதியின் சிவில் நிர்வாகம், பொலிசில், முஸ்லீம்களின் பகுதி வீதப் பிரதிநிதித்துவம் அமுல்படுத்தப்பட வேண்டும். சொந்த வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்கள், உரிய நிவாரணங்களுடன் குறித்த கால அளவுக்குள் மீளக் குடியமர்த்தப்படவேண்டும். பறிக்கப்பட்ட சொத்துக்கள் உடனடியாக திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

6. சிறீலங்கா மாநிலத்தில் மலையகத் தமிழ் மக்களுக்கு ஒரு 'சுயாட்சிப் பகுதி' ஏற்படுத்த வேண்டும், சுயாட்சிப் பகுதியின் சிவில் நிர்வாகம், பொலிசில், மலையகத் தமிழ் மக்களின் பகுதி வீதப் பிரதிநிதித்துவம் அமுல்படுத்தப்பட வேண்டும். சிறீலங்காவிலும், தமிழீழத்திலும் உள்ள அனைத்து மலையக மக்களுக்கும் குடியுரிமை, வாக்குரிமை, வழங்கப்பட வேண்டும். தமிழீழப் பகுதியில் வாழ்கின்ற, வாழ விரும்புகின்ற மலையக மக்களுக்கும், மலையகத்தை சேர்ந்த போராளிகளுக்கும், தமிழீழத்தில் நிரந்தரமாக வாழ்வதற்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட வேண்டும்.

7. சிறீலங்கா அரசால் 1972-களுக்குப் பின், தமிழீழப் பகுதியில் செய்யப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் குறித்த கால எல்லைக்குள், அகற்றப்பட வேண்டும். இதில் திட்டவட்ட மான கால அளவும், அமுல்படுத்தலும் இருக்க வேண்டும்.

8. பயங்கரவாதச் சட்டம், அவசரகாலச் சட்டம், தேசிய பாது காப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அனைத்து தமிழ், முஸ்லீம், மலையகப் போராளிகளும், போராட்டத்தை ஆதரித்தவர்களும் என அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்; (பொய்க் குற்றச்சாட்டுக் களின் கீழ்) வழக்குப் பதிவு செய்யப்பட்டவை திரும்பப் பெறப்பட வேண்டும்.

9. தமிழீழத்தின் சிவில் சமூக அமைப்பு, பொலிஸ்துறை முழுவதும், மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். தமிழீழ மாநில அரசியல் - அதிகாரத்தில், நீதித்துறையில் பெண்களுக்கு 50 வீத இட ஒதுக்கீடு கண்டிப்பாக அமுல் படுத்தப்பட வேண்டும்.

10. சிறீலங்கா இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிசு என முழுப்படையினரும், தமிழீழத்தில் இருந்து வெளியேற வேண்டும். ஒன்றியரசின் முப்படைகள் எல்லாவற்றிலும் தமிழ்ப்படைப் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும். எல்லா இயக்கங்களின் போராளிகளும், தமிழ் மக்களும் (ஆண் - பெண்) படைப் பிரிவுகளில் இணைக்கப்பட வேண்டும். (தமிழீழத்தில், 1983 -இல் இருந்த நிலைமைக்கு, அரசு படைக்குறைப்பு - முகாம் குறைப்பு செய்வது, முகாமுக்குள் முடக்கி வைத்திருப்பது ஏற்றுக் கொள்ள முடியாது.)

11. தேர்தல் ஆணையம், மாநில சட்டமன்றம் அமைத்தல், சட்டமன்றத் தொகுதிகளை குடிசன மதிப்பீட்டு அடிப் படையில் சமமாக உருவாக்குவது, அமைச்சரவை, முதலமைச்சரை தேர்ந்தெடுக்கும் முறைகள், மாநில நிதி ஆணைக்குழு, மாநில நீதிமன்ற அமைப்பு, மாநில அரச சேவை இவை முழுவதும் மாநில அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். மக்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதியை, எந்த நேரத்திலும் தொகுதி மக்கள் திருப்பி அழைக்கும் உரிமை அரசியல் சாசன ரீதியில் இருக்க வேண்டும். இதற்கான தேர்தல் வடிவங்களும் குறிப்பான முறை களும் உருவாக்கப்பட வேண்டும்.

12. மாநிலத்தின் எல்லைக்குட்பட்ட நிலத்தின் மேலான உரிமை, நிலப்பங்கீடு, துறைமுகங்கள் மீதான உரிமை, கடல் எல்லைகள் மீதான கட்டுப்பாடு, கடல் வளங்களை பயன் படுத்தும் உரிமை, கல்வி, உயர் கல்வி, கல்விக் கொள்கை வகுக்கும் உரிமை, போக்குவரத்து, சுகாதாரம் மற்றும்

சேவைத் துறைகள் முழுவதும் மாநில அரசின் கட்டுப் பாட்டில் இருக்க வேண்டும்.

13. தமிழீழப் பகுதியில் (தரையிலும் - கடலிலும்) சிறீலங்கா அரசு படைகளால், அரசு சார்பு ஆயுதக் குழுக்களால், விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டுள்ள மிதி வெடிகள், கண்ணி வெடிகள், பொறி வெடிகள் உள்நாட்டுக் கண் காணிப்பு குழு முன்னிலையில் உடடினயாக அகற்றப் பட வேண்டும். அதன் பின்னரே, அகதிகள் - இடம் பெயர்ந்த வர்கள் தங்கள் வீடுகளில் குடியமரவும், கடலில் மீன் பிடிக்கவும், விவசாய நிலங்களில் தொழில் செய்யவும் அனுமதிக்கப்பட வேண்டும்.

14. யுத்தத்தால் இடம் பெயர்ந்து இலங்கைக்குள்ளும் அகதிகளாக இந்தியா வில், முகாம்களில் / இடைத்தங்கல் நிலையங்களில் / உறவினர் வீடுகளில் வாழும் தமிழ், முஸ்லீம், மலையக மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல, குறிப்பிட்ட கால எல்லைக்குள் சொந்த இடங்களில் குடியமர அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். வெளிநாட்டு வருமானம் இல்லாதவர்களுக்கு அரசு நிவாரண உதவிகளில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

15. இந்தியாவில் அகதி முகாம்களில் உள்ள தமிழீழ அகதிகள், சிறப்பு முகாம் மற்றும் சிறைகளிலுள்ள போராளிகள் மிகக் குறுகிய காலத்தில், தமிழீழப் பகுதிகளில் வந்து குடியமர ஏற்பாடு செய்ய வேண்டும். வெளிநாடுகளில் உள்ள குடியுரிமை இல்லாத தமிழீழத்தவர்கள், குறிப்பிட்ட கால எல்லைக்குள் திரும்ப அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

16. சிறீலங்கா அரசு, தமிழ் மக்களை - போராளிகளை அழிப்ப தற்காக இதுவரை நடத்திய ஆக்கிரமிப்பு யுத்தத்தின் உள் நாட்டு - வெளிநாட்டு கடன்சுமையை, தமிழீழ மக்களின் தலையில் மீண்டும் எந்த வகையிலும் சுமத்தப்படக்கூடாது.

17. தமிழீழ மக்களின் சேமிப்பை பேணவும், மூலதனத்தை சமூக வளர்ச்சிக்கு ஒழுங்கமைக்கவும், "தமிழீழ மக்கள் வங்கி" கண்டிப் பாக உருவாக்கப்பட வேண்டும். புலிகளின் வங்கி, அப்படியே தமிழீழ மக்கள் வங்கியாக மாற வேண்டும். அந்நியநாட்டு வங்கி, நிதித் தொழில் தமிழீழத்தில் அனுமதிக்கப் படக் கூடாது.

18. இலங்கை நாட்டின் பாதுகாப்பு, நிதி வெளியுறவுத் துறை என்பன ஒன்றியரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற அதே வேளை, வெளிநாட்டு நிதி, தொழில், வணிகக் கொள்கை களில் ஒன்றியரசு, மாநில அரசின் நலனுக்கு எதிரான முடிவுகளை எடுத்தால், மாநில அரசு அவற்றை மாநிலச் சட்டமன்றம் மூலம் நிராகரிக்கும் உரிமை கண்டிப்பாக இருக்க வேண்டும். (WTO) உலக வர்த்தக அமைப்பின் உடன் படிக்கையினை தமிழீழ மாநில அரசு ஏற்றுக் கொள்ளாது, சிறீலங்கா அரசின் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக இரத்தம் சிந்திப் போராடிவரும் தமிழீழ மக்கள், தமிழீழத் தேசியத் தொழில்களை - வணிகத்தை நசுக்கும் WTO இன் கொள் கைக்கு எதிராக தொடர்ந்து போராடும் உரிமை உண்டு.

19. வெளிநாட்டு முதலீடுகள். கனரகத் தொழிற்துறை, உள்கட்டமைப்பு - அறிவியல் தொழில்நுட்ப துறைகளில் அனுமதிக்கப்படலாம். வெளிநாட்டு முதலீடுகளின் இலாபத்தில் 75 வீதம் மீண்டும் உள்நாட்டு உற்பத்திக்கு திரும்ப முதலீடு செய்யப்பட வேண்டும், அன்னிய நேரடி முதலீடுகள் (FDI) கூட்டு முதலீடுகள் (FJI) 100 ஆண்டுகள் திரும்பப் பெற முடியாத சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். இதற்கு தடையான வெளிநாட்டு முதலீடுகள், உலகமயமாக்கல், திறந்த பொருளாதாரக் கொள்கை, நவீன மயமாக்கல் என அனுமதிக்கக் கூடாது. வெளிநாட்டு முதலீட்டை கட்டுப்படுத்தும் முழு உரிமையும் மாநில அரசிடம் இருக்க வேண்டும். உள்நாட்டு உற்பத்தியை - வணிகத்தை பாதிக்கும், ஏற்றுமதி இறக்குமதி (EXIM) கொள்கை, அன்னியச் செலவாணியை ஈட்டுவது மட்டும் உற்பத்தி நோக்கிய கொள்கை அனுமதிக்கப்படக்கூடாது.

www.tamilarangam.net

20. அரசு, மதச்சார்பற்ற அரசாக இருக்க வேண்டும். மத, சாதி நிறுவனங்களுக்கு அரசு எவ்வகையிலும் உதவி செய்யக் கூடாது. அன்னிய நாடுகளில் இருந்து, மத-சாதி அமைப்புகள் நிதி பெறுவது கட்டா யமாக தடுக்கப்பட வேண்டும். அரசு தனியார் கல்வி - தொழில் - வணிக நிறுவனங்களில் மதச்சடங்குகள், மதப்பழக்க வழக்கங்கள், கோவில்கள் அனுமதிக்கப்படக் கூடாது. மத நிறுவனங்களின் மதமாற்ற நடவடிக்கை கள் இனிவரும் காலங்களில் தடை செய்யப்பட வேண்டும். மத, சாதி, பிரதேச பெயரிலான அரசியல் கட்சிகள், சமூக சேவை நிறுவனங்கள் தடை செய்யப்பட வேண்டும்.

21. தமிழீழப் போராளிகளின் ஆயுதங்கள், (நீண்டதூர - குறுகிய தூர சிறீலங்கா அரசிடமோ, மூன்றாவது தரப்பு சர்வதேசக் கண்காணிப்பு குழுவிடமோ, நேரடியாகவோ அல்லது தனியாக எக்காரணம் கொண்டும் ஒப்படைக்கப்பட மாட்டாது. நேரடியாக மாநில, ஒன்றியரசின் படைகளில் இணைக்கப் படுவதன் மூலம் மட்டும் மாற்றப்பட வேண்டும்.

இலங்கையில் இனப் பிரச்சனை தீரவும், அரசியல் தீர்வு ஏற்படவும், 'தமிழீழ புதிய சனநாயக கட்சி' முன் வைத்துள்ள இக்கோரிக்கைகளுடன் இணக்கம் ஏற்படும். இலங்கையிலுள்ள (தமிழீழம் - சிறீலங்கா) மற்றைய கட்சிகள், முன்னணிகள், இயக்கங்கள், வெகுசன அமைப்புகளுடன், இக் கோரிக்கைகளை கூட்டாக பிரச்சாரம் செய்யவும், இதற்காக கூட்டுப் போராட்டங்களில் ஈடுபடவும், தமிழீழ புதிய சனநாயக கட்சி வெளிப்படையாக அறைகூவல் செய்கின்றது.

இலங்கைக்கு வெளியே, உலகளவில் எந்த நாடுகளிலும், தமிழீழ மக்களின் - தேசத்தின் நலனுக்கான கோரிக்கைகளை அங்கீகரிக்கும், அந்நாட்டு மக்கள் அமைப்புகளுடன், அந்த நாடுகளில் உள்ள தமிழீழ அகதி / புலம் பெயர்ந்த அமைப்பு களுடன், மற்றும் அந்நாட்டு அகதி / வெளிநாட்டு அகதி அமைப்பு களுடன், கூட்டுச் சேர்ந்து (அய்க்கியப்பட்டல்ல) பிரச்சாரம், ஆதரவுப் போராட்டங்கள் செய்ய, அந்நாடுகளிலுள்ள தமிழீழ புதிய சனநாயக கட்சியின் வெளிநாட்டுக் கிளைகள் வெளிப்படையாக அறைகூவல் செய்கின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் - போரில் தமிழீழ மக்களும், குறிப்பாக தொழிலாளர்களும், விவசாயிகளும், மீனவர்களும், நடுத்தர வர்க்க மக்களும் மிக அதிகளவு தியாகம் செய்து வருகிறார்கள். வாழ்வா - சாவா என அரசு கட்டுப்பாட்டுப் பகுதி / புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில், அரசின் பொருளாதார, மருத்துவ தடைகள் மத்தியில், கல்வி - தொழில் நெருக்கடியில் தேசத்தை விட்டு வெளியேறாது. உயிர் பிழைத்து வாழ்ந்திருக் கிறார்கள், போராடுகிறார்கள். தமிழீழ விடுதலை யுத்தத்துக்கு நேரடியாக - மறைமுகமாக உயிராதாரமாக விளங்கி வந்திருக் கிறார்கள். உயிரைக் காப்பதற்காக இலட்சம் அகதி மக்கள், இந்தியாவில், வெளிநாடுகளில் அகதிகளாகவுள்ளனர். தமிழீழ உழைக்கும் மக்களின் வாழ்வில் ஒரு முன்னேற்றத்தை, யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை - அரசியல் தீர்வு ஏற்படுத்த வேண்டும். இக்கடமையை நிறைவேற்றாத இராணுவத் தீர்வோ, அரசியல் தீர்வோ, பெரும்பான்மை தமிழீழ மக்களுக்கு செய்யும் வரலாற்றுத் துரோகமாகும். மக்களின், தேசத்தின் நலனில் - முன்னேற் றத்தில் அக்கறை கொண்ட அனைத்து தமிழீழ அரசியல் சக்திகளும், கட்சிகளும், முன்னணிகளும், வெளியீடுகளும் தேசநலன் - மக்கள் நலன் என்ற இலக்கில் இக்கோரிக்கைகளை மறுபிரசுரம் செய்து மக்களிடம் கொண்டு செல்லுங்கள்.

புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளே! இக்கோரிக்கைகளை எட்டுத் திக்கும் பரப்புங்கள், மக்களை அணிதிரட்டுங்கள், கூட்டுப் போராட்டங்களை நடத்துங்கள்.

**மத்திய குழு**

**தமிழீழ புதிய சனநாயக் கட்சி**

**N D P T**

www.tamilarangam.net

*பின் அட்டைப் பக்க தொடர்ச்சி*

# இலங்கை யுத்தத்தின் பரிணாமமும் உலகமயமாக்கலின் படையெடுப்பும்

## நூல் விமர்சனம்

தேசிய வளங்களை பாதுகாக்கவும், தேசிய பொருளாதாரத்தை மீட்கும் ஒரு தேசிய யுத்தமாக இருந்தால் அது முற்போக்கானதாக அமைந்திருக்கும். ஆனால், தேசிய பொருளாதாரத்தை அன்னியனுக்கு தாரைவார்க்கும் தேசிய கொள்கையுடன், தேசியத்துகக்கு பதில் இன யுத்தமான போது, மக்கள் மேலும் அடிமைத் தனத்துக்குள் இழிந்து செல்லுகின்றனர்.யுத்தம் ஏற்படுத்தும் விளைவு மற்றொரு தேசிய அழிப்பாக மாறி விடுகின்றது.

இதே காலத்தில் சீறிலங்கா இராணுவம் 35,118 கோடியை செலவு செய்துள்ளது. ஒட்டு மொத்தமாக தேசிய வருமானத்தில் 50 முதல் 60 ஆயிரம் கோடியை இராணுவத்துறை சார்ந்து அழிக்கப்பட்டுள்ளது. இந்த யுத்தத்தில் மக்களின் தேசிய வளங்கள் அழிக்கப்படும் அதே நேரம் மக்களுக்கு எதை பெற்றுத்தர இதை நடத்துகின்றனர் என்றால் எதுவுமில்லை. தேசிய வளங்களை பாதுகாக்கவும், தேசிய பொருளாதாரத் தை மீட்கும் ஒரு தேசிய யுத்தமாக இருந்தால் அது முற்போக்கான தாக அமைந்திருக்கும். ஆனால் தேசிய பொருளாதாரத்தை அன்னியனுக்கு தாரைவார்க்கும் தேசிய கொள்கையுடன், தேசியத்துக்கு பதில் இன யுத்தமான போது, மக்கள் மேலும் அடிமைத் தனத்துக்குள் இழிந்து செல்லுகின்றனர்.யுத்தம் ஏற்படுத்தும் விளைவு மற்றொரு தேசிய அழிப்பாக மாறி விடுகின்றது.

(பக்கம் 101)

புதுக்கொலனிய இலங்கையில் தேசிய இனப்பிரச்சனையின் வரலாற்றை தேசியப்போரட்டத்தின் உள்ளார்ந்த உண்மையான பிரச்சனைகளை பரிமாணங்களை ஆதாரத்துடன் தெரிந்து கொள்ளவும், சீறீலங்கா அரசின் சிறுபான்மை இனங்கள் மீதான இன ஒடுக்குமுறைக்கு அப்பாலும் ஏகாதிபத்திய உலகமய

www.tamilarangam.net

மாக்கலில் உள்ள தேசிய தேசிய ஒடுக்குமுறைகளை புரிந்து கொள்ளவும் **"இலங்கை" "யுத்தத்தின் பரிணாமும் உலகமய மாக்களின் படைஎடுப்பும்"** என்ற புத்தகத்தை வாங்கி படிப்பது மிகவும் அவசியமானது.

விடுதலைப் புலிகளுக்கும் - சீறீலங்கா அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில், இதுவரை கால தேசியப் போராட்டத்தில் மக்களின் இழப்புக்கள், போராளிகளின் தியாகங்கள் எல்லாவற்றையும், ஏகாதிபத்திய தேசிய ஒடுக்குமுறைக்கு தாரைவார்க்க முற்படும். தமிழீழ விடுதலைப் புலிகளின், தமிழீழ முதலாளித்துவ சக்திகளின 'தேசியம்' எந்த சமூகப் பின்புலத்தில் இருந்து தொடங்கியது. வளர்ந்தது, மாறுகின்றது என்பதை புரிந்து கொள்ளவும் இந்நூல் பயன்படும்.

உழைக்கும் மக்களின் வர்க்கக் கண்ணோட்டத்தில் இருந்து சமூகப் பிரச்சனைகளை தேசியப் பிரச்சனைகளை ஆராயும் ஆசிரியரின் முயற்சியை வரவேற்க்க வேண்டும். உள்நாட்டு இன-மத ஒடுக்குமுறை அரசுகளுக்கு எதிரான தேசியப் போராட்டங் களில், ஏகாதிபத்திய உலகமய மாக்கல் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான தேசியப் போராட்டங்களில் உள்நாட்டு முதலாளி வர்க்கங்களுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் இடையிலான உறவை அறிந்து கொள்ள முற்படுபவர்களுக்கும், தேசியப் போராட்டத்தில் பிற்போக்கு தேசிய வாதத்துக்கு பின்னால் அணிதிரள மறுக்கும் ஒவ்வொரு தேசிய விடுதலைப் போராளியும் படிக்க வேண்டிய நூல் இது.

இந்நூல் தொடர்பான ஆழமான விமர்சன ஆய்வு ஒன்று தேவை என உணர்கிறேன். ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தேசிய போராட்டத்தை, ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டமாக, புதிய சனநாயக அரசை/சோசலிச அரசை நிறுவும் சமூகப்புரட்சியின் ஒரு முக்கிய அம்சமாக தேசியப் போராட்டத்தை அனுகுபவர்களால் தான் இந்த விமர்சன ஆய்வை செழுமை படச் செய்ய முடியும்.

இந்நூலில் வெளிப்படும் முக்கியமான ஒரு விடயத்தை மட்டும் இங்கு சுட்டிக்காட்ட முயல்கிறேன்.

நூலின் ஆசிரியர், **"தேசியம்"** என்ற வார்த்தையை நூலில் எல்லா இடங்களிலும் அல்லது பெரும்பாலான இடங்களில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொத்தாம் பொதுவாக பயன்படுத்தியுள்ளார். ஒடுக்கப்படும் தமிழ்த்தேசிய இனத்தில் இருந்து பிற்போக்கு தேசியம் மட்டும்தான் வெளிப்பட்டதாக நிறுவமுயன்றுள்ளார். இது உண்மையல்ல தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் முற்போக்கு தேசியமும் வெளிப்பட்டது. ஆனால், அது தெளிவான பாட்டாளி வர்க்க சித்தாந்த அரசியலில் இருந்து வெளிப்படவில்லை. இதற்கான காரணங்களை இலங்கை பாட்டாளி வர்க்க கட்சிகளின் தவறுகளில் இருந்து புரிந்து கொள்ள வேண்டும் வரலாற்றில் தேட வேண்டும். ஆழமான தெளிவான பாட்டாளி வர்க்க சித்தாந்த அரசியலில் இருந்து **புரட்சிகர முற்போக்கு தேசிய இயக்கங்கள்** உருவாகாத காரணத்தால் தான் NLFT, TMPP, தீப்பொறி போன்ற முற்போக்கு புரட்சிகர தேசிய இயக்கங்கள் நாளாவட்டத்தில் உள்நாட்டு - உலக நிலமைகளை எதிர் கொள்ளமுடியாமல் சிதைந்தன. கலைந்தன. குட்டி முதலாளிய கற்பனா சோசலிச அரசியலில் இருந்து வெளிப்பட்ட **முற்போக்கு தேசியம்** பேசிய EROS, EPRLF, PLOT, TELO என்பன, தங்கள் இயக்கத்தில் இருந்த முற்போக்கு தேசியவாதிகளை தாங்களே கொலை செய்தன. இயக்கத்தை விட்டு ஓடச் செய்தன. பின்னர் சிறீலங்கா அரசுடன் ஏகாதிபத்தியங்களுடன் சமரசம் செய்து கொண்டன.

தமிழ்த் தரகு முதலாளித்துவ கட்சிகளாக, பிளவுபட்ட அரசியல் பிரதிநிதிகளாக இன்னும் இயங்குகின்றன. ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனத்தில் இருந்து தெளிவான உறுதியான முதலாளித்துவ சித்தாந்த அரசியலில் வெளிப்பட்ட புலிகள் இயக்கம், உள்நாட்டு மக்களையும் உலகமக்களையும் தன் பக்கம் வென்றெடுப்பதற்காக **'சோலிச தமிழீழம்'** என்றுதான் இலட்சியம் பேசியது. ஏகாதிபத்திய எதிர்ப்பற்ற இந்த முதலாளித்துவ தேசிய இயக்கம் சிறீலங்கா அரசுக்கு எதிரான, உறுதியான விடாப் பிடியான, இன ஒடுக்குமுறை எதிர்ப்பு யுத்தத்தினை நடத்தி வந்தது. அதே அளவிலான, உறுதியுடன் விடாப்பிடியுடன் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் இருந்த ஏனைய தேசிய இயக்கங்களையும், தமிழ் தரகு முதலாளித்துவ - குட்டி முதலாளித் துவ அரசியல் சக்திகள் அனைத்தையும் அழித்தொழித்தது. தமிழீழ மக்களின் தேசியப் போராட்டத்தினை பயன்படுத்தி முதலாளித்துவ தேசியத்தை பலமான உட்கட்டமைப்புடன் நிறுவியுள்ளது. உற்பத்தியிலும், வணிகத்திலும், நிதித்தொழி லிலும் ஏகாதிபத்திய அன்னிய மூலதனங்களுடன் பிணைக்கப் ட்டுள்ள தமிழ் மக்கள் மத்தியிலுள்ள மூலதன உடமையாளர்களின்

உணர்வு பூர்வமான வர்க்கப் பிரதிநிதியாக புலிகள் இயக்கம் விளங்குகின்றது.

சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறையானது 1978-ல் மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமை-குடியுரிமையை பறித்தது. 1950களில் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழ், முசுலிம் விவசாயிகளின் நிலங்களைப் பறித்தது. 1956ல் தனிச் சிங்கள சட்டம் மூலம் தமிழ் தேசிய இனத்தின் மொழியுரிமை மறுக்கப் பட்டது. 1960களில் சிங்கள மீனவ குடியேற்றங்கள் மூலம் தமிழ் முசுலிம் மீனவத் தொழிலாளர்களின் வாழ்வுரிமை பறிக்கப்பட்டது. 1970 கல்வியில் தரைப்படுத்தல் கொண்டுவரப்பட்டது. 1972 இலங்கை என்ற பெயர் மாற்றப்பட்டு **சிறீலங்கா** என பெயர் சூட்டப்பட்டது. 1970களில் தொடங்கி திட்டமிட்ட தமிழ் இனப்படுகொலைகள் அரங்கேற்றப்பட்டன. இவை எல்லாம் ஆசிரியரின் நூலிலும் உள்ள ஆதாரங்கள் தான்.

சிறுபான்மை இனங்கள் மீதான இன ஒடுக்குமுறைகளை அதற்கு எதிரான மக்களின் உணர்வுகளை - போராட்டங்களை சிறுபான்மை இனங்கள் மத்தியில் இருந்த பாராளுமன்ற முதலாளித் துவ தலைமைகள் தங்களின் தேர்தல் அரசியலுக்கு பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்ற பயன்படுத்தின. தேர்தல் முடிந்ததும். சிறீலங்கா அரசில் அதிகாரங்களை அமைச்சர் பதவிகளை பெற அரசுடன் சமரசப்பட்டன. மக்களுக்கு துரோகம் இளைத்தன. இதனால் வெறுப்பு அடைந்து தேர்தல் அரசியல் பாதையுடன், தரகு முதலாளித்துவ மிதவாத தலைமைகளுடன் முரண்பட்டனர். ஆனால் **முதலாளித்துவ அரசியலுடன் முரண்படாத இளைஞர் கள்** சிறீலங்கா அரசு இன ஒடுக்குமுறைக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை முன்னிறுத்தினர். தமிழ் முதலாளித்துவ பாராளு மன்ற அரசியல், எப்படி யாழ்மையவாதத்தை முதன்மைப் படுத்தி நின்றதோ அதேபோன்று ஆயுதம் தாங்கிய முதலாளித்துவ தேசிய இயக்கங்களும் யாழ் மையவாதத்தையே முதன்மைப் படுத்தி வந்தது. அதனால் தான் யாழ் நடுத்தர வர்க்கத்தை பாதித்த தரைப்படுத்தல் சட்டத்தை முதன்மைப்படுத்தி முதலாளிய தேசிய அரசியல் முன் தள்ளப்பட்டது. யாழ் மையவாதத்துக்கு வெளியே பரந்துபட்ட தமிழ் மக்களின் சனநாயக உரிமைகள் புறக்கணிக்கப் பட்டது.

குட்டி முதலாளிய-முதலாளிய தேசிய இயக்கங்கள் தங்களுக்கு ஆள் ஆணி திரட்ட, தேசிய அரசியலை கெட்டிப்படுத்த

வாக்குரிமை, குடியுரிமை பறிப்பு முதல் குடியேற்றங்களின் பாதிப்புக்கள் வரை பேசின. தேசிய இன ஒடுக்குமுறைக்கு உள்ளாகின்ற குட்டி முதலாளிய -அரசியல்- ஆயுதப் போராட்ட இயக்கங்களிடம் இதற்கும் அப்பால், பாட்டாளி வாக்கம் எதை எதிர்பாக்க முடியும். ஆனால் இதற்காக இனவாத அரசின் இன ஒடுக்கு முறைச் சட்டங்களை விமர்சனத்துடன் நிறுத்திவிட முடியாது. புரட்சிகர தேசியப் போராட்டத்தில் சனநாயகத்தின் முழு பண்பை மக்களுக்கு புரட்சிகர பாட்டாளிவர்க்கம் தான் நிரூபிக்க வேண்டும். இன ஒடுக்குமுறையில் தன்வர்க்கம் சார்ந்த பாதிப்புக் களை முக்கியப்படுத்தி முதன்மைப்படுத்தி தேசியக் கோரிக்கை களை முன்னிறுத்தியது இன ஒடுக்குமுறையால் பாதிதூக்கப்பட்ட தொழிலாளிகளையும், விவசாயிகளையும் தனது வர்க்க நலனுக் காக தன் பின்னால் அணி திரட்டியது. இதற்காக ஒடுக்கப்படும் **தேசிய இனத்தின் தேசிய கோரிக்கையும், தேசியப் போராட் டத்துக்கான அடித்தளத்தின் தார்மீக நியாயங்களும் பிற்போக் கானவை என முத்திரை குத்த முடியுமா?**

சிறீலங்கா இனவாத அரசின் தேசிய ஒடுக்குமுறையால் பாதிக்கப்பட்டது. தமிழ்த் தேசிய இனத்தின் முதலாளி-குட்டி முதலாளி வர்க்கங்கள் மட்டுமல்ல. வரலாற்று ரீதியான ஆதாரங் களை முன்வைத்துள்ள ஆசிரியருக்கும் நன்கு தெரியும். அப்படி யானால் பாட்டாளி வர்க்க இயக்கம் தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிராக இன ஒடுக்குமுறையால் 1948-ல் தொடங்கி பாதிக்கப்பட்ட தொழிலாளி-விவசாயி வர்க்கத்திற்காக எப்படிப் போராடியது? எப்படி போராடி இருக்கவேண்டும்? இதைப் பற்றி ஆசிரியர் எதுவும் தெளிவாக எழுதவில்லை. புதிய சனநாயகப் புரட்சி பற்றி பேசுகின்ற நாம், தேசியஇன ஒடுக்குமுறையால் சமூக பொருளாதார அடக்குமுறையால், சுரண்டலால் பாதிக்கப்படுகின்ற புதிய சனநாயக வர்க்கங்களிலுள்ள மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனை களை பேசாமல், முன்வைக்காமல் அவர்களை எப்படி பாட்டாளி வர்க்கம் அணிதிரட்ட முடியும்? கீழ் இருந்து காட்டப்படும். அய்க்கிய முன்னணிக்கான அரசியல் அடிப்படை என்ன? ஆசிரியரும், வாசகர்களும் இது குறித்து சிந்திக்க வேண்டும்.

தேசிய இன ஒடுக்குமுறையால் பாதிக்கப்பட்ட சிறுபான்மை மக்களின் சனநாயக உரிமைக்காக புரட்சிகர பாட்டாளிவர்க்கம் உறுதியாக தொடர்ந்து போராடியது. ஆனால், தேசிய இன ஒடுக்குமுறை கூர்மையடைய, ஒடுக்கப்பட்ட சிறுபான்மை இன

மக்களின் சனநாயகப் போராட்டம் குறிப்பாக தமிழ்த்தேசிய இனத்தின் போராட்டம் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமாக வளர்ந்தது. தமிழ் மக்களை தேசிய இனமாக அங்கீகரிப்பதா?, சுய நிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்வதா? என்ற தர்க்கம் பாட்டாளி வர்க்க முகாமில் நடந்தது. பாட்டாளி வர்க்கத்துள் இருந்த திரிபுவாத முகாம் ஒடுக்கப்பட்ட சிறுபான்மை மக்களின் - தேசிய இனத்தின் உரிமைகளை மறுத்ததுடன் சிங்கள பேரின வாதத்தின் பக்கம் சாய்ந்தது; புரட்சிகர பாட்டாளி வர்க்க முகாம் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதாக மட்டும் அறிவித்தது. ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட் டத்தை தான் தலைமை தாங்கி முன்னேடுக்க வில்லை. சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னேடுத்தால் கூட தொழிலாளிவர்க்க ஒற்றுமைக்கு விரோதமாகிவிடும் என தர்க்கித்தது.

தேசிய இன ஒடுக்குமுறை தமிழ் தேசிய இன அழிப்பாக மாறத் தொடங்கியது. தேசிய சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பிரிந்து சென்று தனியரசு அமைக்கின்ற தமிழீழ தேசிய சுதந்திரப் போராட்டம் வளரத் தொடங்கியது, பாட்டாளி வர்க்கம். பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்கு முரணற்ற முறையில் ஒடுக்கப்படும். தமிழ்த்தேசிய இனத்தின் தேசியக் கோரிக்கையை, தேசிய விடுதலைப் போராட்டத்தை தனது தலைமையில் முன்னேடுக்க தவறியது.

திரிபுவாதிகள். சிங்களப் பெருந் தேசிய வெறியின் பக்கம் சாய்ந்து விட்டதை பார்த்து, தாங்கள் தேசியக் கோரிக்கையை கையில் எடுத்தால் தமிழ்க் குறுந்தேசியத்திற்கு பலியாகிவிடு வோமா என அஞ்சினார்கள். அந்தளவுக்கு **பாட்டாளி வாக்கத்தின் புரட்சிகர தேசியப் போராட்டம் பற்றிய கோட்பாட்டு பலவீனம் நிலவியது. நிலவுகிறது.** இலங்கை பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்று ரீதியான இந்தத் தவறை புரிந்து உணர்ந்தவர்கள். புரட்சிகர பாட்டாளி வர்க்க கட்சியையும், புரட்சிகர தேசிய விடுதலை இயக்கத்தையும் கட்டும் முயற்சியை தொடங்கினர். தமிழ் முதலாளித்துவ தேசிய இயக்கங்களால் இம்முயற்சிகள் நசுக்கப்பட்டது. தலைவர்கள் சிலர் படுகொலை செய்யப்பட்டனர். கட்சிக்குள் இருந்த குட்டி முதலாளிய கலைப்பு வாதிகள் கட்சியை கலைத்துவிட்டனர், வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்தனர்.

புலிகளின் ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ அரசியல் என்பது இன்று நேற்று வெளிப்பட்ட ஒன்றல்ல. **'சோசலிச**

**தமிழீழம்'** என பெயர் சூட்டினர் அந்த தமிழீழம் கியூபா மாதிரி இருக்கும் என்று கூடல கூறியதில்லை. சிங்கப்பூர், இஸ்ரேல் போன்ற தமிழீழம் என்றே உண்மை பேசிவந்தனர். புலிகள் தொடக்க காலங்களில் இருந்தே இதை வெளிப்படுத்தினர். (J.R.சிங்கப்பூர் போல சிறீலங்காவை மாற்றுவதாக கூறி திறந்த பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்தினர்)

புதுக்கொலனிய நாடுகளில், எந்த இனத்தை சேர்ந்த தேசிய இயக்கமானாலும், அது ஏகாதிபத்திய எதிர்ப்பு கொள்கை இன்றி, அது எந்த வர்க்கத்தில் தங்கி நிற்கின்ற அரசியல்-ஆயுத போராட்ட இயக்கமும், தனது இன தரகு முதலாளிகளின் நலனுக்கு எதிராக ஒருபோதும் செல்வதில்லை. செயற்படுவதில்லை.

இன ஒடுக்குமுறை செய்யும் உள்நாட்டு தரகு முதலாளித் துவ அரசை எதிர்த்து போராடும் - யுத்தம் செய்யும் ஒரு தேசிய இயக்கம் வெளிப்படையாக ஏகாதிபத்திய எதிர்ப்பை முன் வைக்கவில்லை எனில், அது தேசியத்தை கையில் எடுத்து இருக் கின்ற தரகு முதலாளித்துவ இயக்கமாகும்.

தேசிய இன ஒடுக்குமுறை அரசுக்கு எதிராக, அன்னிய ஆக்கிர மிப்பாளர்களுக்கு எதிராக, அத்தரகு இயக்கம் கூட போராடுகின்றவரை அவ்இயக்கத்துடன் மேல் இருந்து அய்க்கிய முன்னணி கட்டி, பொது எதிரிக்கு எதிராகப் போராட பாட்டாளி வர்க்கம் தயாராக இருக்க வேண்டும்.

எப்போது அத்தகைய இயக்கம், பாட்டாளி வர்க்க கட்சி மீது, புரட்சிகர தேசிய விடுதலை இயக்கம் மேல் தாக்குகிறதோ, அப்போது ஒரு உள்தேசிய வர்க்க யுத்தத்தை, தேசிய விடுதலை யுத்த காலத்திலேயே நாம் நடத்த வேண்டி இருக்கும். அல்லது எப்போது முதலாளித்துவ தேசிய இயக்கம் தேசிய விடுதலைப் போராட்டத்தை கைவிட்டு எதிரிகளுடன் சமரசப்படுகிறதோ அப்போதே புரட்சிகர தேசிய விடுதலை இயக்கத்துக்கும், அவ்இயக்கத்துக்கும் இடையிலான முரண்பாடு பகை முரண்படாகி விடுகிறது. அவ்இயக்கம் பிற்போக்கு தேசியத்தை பிரதிநிதித்துவப் படுத்துகிறது.

பாட்டாளிவர்க்கம் முன்னேடுக்கும் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் என்பது, ஆலயங்களில் தமிழில் பூசை செய்வது; மேடைகளில் தமிழ் இசையில்-மொழியில் பாடுவதுடன் மட்டும் நின்றுவிடுகின்ற ஒரு போராட்டமல்ல, ஒரு கடினமான

வர்க்கப்போர் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். **தேசிய விடுதலைப் போராட்டத்துள் வர்க்கப் போராட்டம், தேசிய விடுதலைப் போருக்குள் ஒரு வர்க்கப் போர் நடந்து கொண்டே இருக்கும்.**

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் இதை தெரிந்து கொண்டு செயற்படத் தவறியது. பாட்டாளி வர்க்க புரட்சியாளர்களின் தவறே ஒழிய . தமிழீழ முதலாளிவர்க்கத்தின், புலிகளின் தேசிய அடித்தளம் காரணமல்ல என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்ததாக **'தேசியத்தை'** தெளிவாக அடையாளப்படுத்துவதிலும் நூலில் குழப்பம் உள்ளது. இன-மதவாத ஆளும் தரகு கட்சிகள் கூட தேசியத்தை பேசிக்கொண்டே சிறுபான்மை இனங்கள்-மதங்கள் மீது ஒடுக்குமுறையை கட்டவிழ்த்து விடுகின்றன.

சிறீலங்கா ஆளும் வர்க்கம் முன்னிறுத்துகின்ற தேசியத்தையும், சிறீலங்கா அரசுக்கும்-ஏகாதிபத்திய உலகமயமாக்கல் தேசிய ஒடுக்கு முறைக்கும் ஏதிராக போராடுகின்ற சிங்கள மக்கள் - சிறீலங்கா தேசம் முன்னிறுத்தும் தேசியத்தையும் நாம் எப்படி வேறுபடுத்தி அடையாளம் காட்டப் போகிறோம். ஆளும் வர்க்கத்தின் தேசியத்தை பிற்போக்கு தேசியவாதமாக, இனவாத-மதவாத தேசிய வெறியாகவும், சிறீலங்கா மக்களின் தேசியத்தை முற்போக்கு தேசியமாகவும் புரட்சிகர தேசியமாகவும் அடையாளப் படுத்த வேண்டும். **சிங்களத் தேசியம், தமிழ்த் தேசியம் என பொதுவாக பார்க்க முடியாது. அடையாளப்படுத்த கூடாது.**

சிறீலங்கா - ஆளும் வர்க்கங்களின் இன-மாத பெருந் தேசிய வெறியையும், இன-மத ஒடுக்குமுறைக்கு எதிராக போராடுகின்ற சிறுபான்மை மக்கள் மத்தியில் உள்ள குறுந்தேசிய வாதத்தையும் சமன்படுத்தி பார்க்க முடியாது. பார்க்க முடியாது. சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது நடத்தி வரும் இன அழிப்பு ஒடுக்குமுறை யுத்தத்தையும் அதற்கு எதிராக தமிழ்மக்கள் மத்தியில் உள்ள முதலாளித்துவ இயக்கம் நடத்தும் இன ஒடுக்குமுறை எதிர்ப்பு யுத்தத்தையும் ஒன்றாக சமன்படுத்தி விடமுடியுமா? ஆசிரியர் இதை **"இனயுத்தம்"** என வரையறுக்கிறார். இது மிக மிகத் தவறு.

சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறை யுத்தத்தையும், புலிகளின் இன ஒடுக்குமுறை எதிர்ப்பு யுத்தத்தையும், இந்திய

ஆக்கிரமிப்பு யுத்தத்தையும், புலிகளின் ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தையும் **'இன யுத்தம்'** என வரையறுக்க முடியாது. **நீதியான யுத்தம் - அநீதியான யுத்தம் பற்றிய பார்வையில் பாரிய தவறு இருப்பதை காட்டுகிறது.** நாளை புலிகள், சிறீலங்கா அரசுடன்-இந்தியரசுடன்-ஏகாதிபத்தி யங்களுடன் சமரசப்படுவார்கள் என்ற முன் அவதானிப்பில் இருந்து, ஒடுக்கப்படும்-ஆக்கிரமிக்கப்படும் தேசிய இனத்தில் உள்ள தரகு முதலாளி வர்க்கம் ஒடுக்கு முறையை-ஆக்கிரமிப்பை எதிர்த்து நடத்துகின்ற **யுத்தம் புரட்சிகர தேசிய விடுதலை யுத்தம் இல்லை.** ஆனால் ஒருபோதும் ஒடுக்குமுறை அரசுகளின் அநீதியான ஆக்கிரமிப்பு யுத்தத்துடன் சமன்படுத்தி பார்க்கக்கூடிய **அநீதியான யுத்தமல்ல, இன யுத்தமல்ல,** இது யுத்தம் பற்றிய கண்ணோட்ட தவறு மட்டுமல்ல என்பது ஆசிரியரும் வாசகர்களும் புரிந்து கொள்ளவேண்டும்.

**'முற்போக்கு'** தேசியம் என்ற வார்த்தையை ஆசிரியர் நூலில் சில இடங்களில் பயன்படுத்தியுள்ளார். தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் **முற்போக்கு தேசியத்தை,** தமிழ்த் தேசிய இனத்திலுள்ள எந்த வர்க்கம் முன்னேடுத்திருக்க முடியும் என ஆசிரியர் எதிர்பார்க்கிறார்? தரைப்படுத்தல் சட்டத்தை முதன்மைப்படுத்தி முன்னேடுத்த-முதலாளித்துவ இயக்கங்கள் பிற்போக்கு தேசியத்தினை வெளிப்படுத்தின என நிறுவும் ஆசிரியர், தரைப்படுத்தலை முன்னிலைப்படுத்திய **குட்டி முதலாளிய வர்க்கத்திடம் முற்போக்கு தேசியத்தை எதிர்பார்க்கிறாரா?** அல்லது பாட்டாளி வர்க்கத்திடம் எதிர்பார்க்கிறாரா?

பாட்டாளி வர்க்கத்திடம் ஆசிரியர் எதிர்பார்க்க மாட்டார். ஏன் எனில் **"தேசியம் எப்பொழுதும் எங்கும் முதலாளித்துவ கோரிக்கையே ஒழிய; பாட்டாளி வர்க்க கோரிக்கை அல்ல"** என்ற தலைப்பில் ஒரு நூலை முன்னதாக எழுதியுள்ளார். அதனால் அவரால் தேசியத்தை, முதலாளி வர்க்கங்களின் எல்லைக்குள் மட்டுமே நிறுத்தி வைத்து **முற்போக்கு தேசியம் - பிற்போக்கு தேசியம் என பார்க்கிறார், அணுகுகிறார்.** முதலாளித்துவ தேசியத்தின் சனநாயக விரோத கூறுகளை மிகச்சிறப்பாக அடையாளம் காட்டுகிறார். விமர்சிக்கிறார். ஆனால், மாற்றாக முற்போக்கு தேசியத்தை. புரட்சிகர தேசியத்தை படைப்பதற்கான பாதை அவரது நூலில் இல்லை.

வரலாற்றில் முதலாளித்துவம் தோன்றிய பின்தான் தேசியமும் தோன்றியது. சந்தை என்கிற பள்ளியில் தான்

முதலாளித்துவம் தேசியம் என்ற பாடத்தை கற்றது. முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக மாறுகின்ற வரை, தேசியப் பிரச்சனையில் முதலாளித்துவம் வரலாற்றின் வளர்ச்சிக்கு தலைமையளித்து முற்போக்கு பாத்திரத்தை வழங்கியது. ஏகாதிபத்தியமாக மாறிய பின், கொலனிகளை - புதுக்கொலனிகளை உருவாக்கின. தானே தேசிய ஒடுக்குமுறை செய்தது. அதனால் தேசியப் பிரச்சனையில் வரலாற்று ரீதியான தேசியப் போராட்டத்துக்கு தலைமையளிக்கும் முதலாளித்துவத்தின் முற்போக்கு பாத்திரம் காலாவதியாகிவிட்டது. ஏகாதிபத்திய கொலனிய கட்டத்திலும் சரி - புதுக்கொலனிய கட்டத்திலும் சரி எழுகின்ற தேசியப் பிரச்சனைகளை, பாட்டாளி வர்க்கம் தனது கைகளில் எடுக்க வேண்டியுள்ளது. வரலாற்று வளர்ச்சியில் முன்னேறிய வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே தேசியத்தையும் - சர்வதேசியத்தையும் முரண்பாடின்றி அணுக முடியும். இணைக்க முடியும். தேசிய ஒடுக்குமுறைகள் அனைத்தையும் இல்லா தொழிக்க முடியும், தேசிய இனங்களுக்கு இடையில் சமத்துவத்தை, நாடுகளுக்கு இடையில் சகோதரது உறுதிப்படுத்த முடியும்.

ஏகாதிபத்திய கொலனிய கட்டத்தில் நடந்த சோவியத் புரட்சியும், சீனப்புரட்சியும் இதை மனித குலத்துக்கு நிரூபித்து காட்டியது.

ஏகாதிபத்திய புதுக்கொலனிய கட்டத்தில், ஏகாதிபத்திய உலகமய மாக்கல் தேசிய ஒடுக்குமுறைக்கும், உள்நாட்டு தேசிய இன ஒடுக்கு முறைக்கும் எதிரான தேசியப் போராட்டங்களை, சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை பாட்டாளி வர்க்கம் தனது சமூகப் புரட்சிக் கடமைகளில் ஒன்றாக, முக்கியமானதாக தனது தலைமையில் தனது கைகளால் முன்னேடுக்க வேண்டியுள்ளது.

ஆசிரியரின் பார்வைப்படியே நாம் ஆசிரியரிடம் ஒன்றைக் கேட்க முடியும். மறு கொலனியாதிக்கத்துக்கு **ஏகாதிபத்திய உலகமயமாக்கல் தேசிய, ஒடுக்குமுறைக்கு உள்ளாகின்ற இலங்கை நாட்டின் பாட்டாளி வர்க்கம், தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக புரட்சிகர தேசியத்தை முன்னேடுக்க வேண்டுமா? இல்லையா?** முன்னேடுத்தால் ஒடுக்கப்படுகின்ற இலங்கை நாட்டின் முதலாளி வர்க்கம் முன்னேடுக்கும் தேசியப் போராட்டத்தை, பாட்டாளிவர்க்கம் எப்படி அணுகப் போகின்றது? ஆசிரியரும், வாசகர்களும் சிந்திக்க வேண்டிய முக்கிய பிரச்சனை இது.

- ***தமிழரசன்***

www.tamilarangam.net

# நுகர்வோரை வியாபாரிகளாக மாற்றும் M.L.M. நவீன வணிக முறை

தமிழீழ அகதிகள் மத்தியில் முகாம்களில் வேலை இன்றி, வருமானம் - போதிய வருமானம் இல்லாது வாடும் ஆண்-பெண் அகதிகள், கடந்த காலங்களில் இயக்கம் - கட்சிகளில் இருந்து ஆயுதங்களை இயக்கவும், அரசியல் பிரச்சாரம் செய்யவும் மட்டும் தெரிந்த முன்னாள் போராளிகளையும் இந்த நவீன வணிகம் கவர்ந்திழுக்கிறது. ஒவ்வொரு நுகர்வோரையும் வியாபாரிகளாக மாற்றி வருகிறது. இதில் ஈடுபட்டு வெற்றி கண்டவர் 10 சதவீதம், தோற்றவர்கள் 90 சதவீதம். இந்நிறுவனங்களில் சேர்வதற்கான முதலீட்டுக்குக் கூட வழி அற்ற இவர்களை அய்ரோப்பிய, அமெரிக்க நாடுகளிலுள்ள இவ் வணிகத்தில் ஈடுபடும் இவர்களது நண்பர்கள், உறவினர்கள் தங்களது வலதுபக்கத்துக்கு ஒருவரையும், இடது பக்கத்துக்கு ஒருவரையும் அவர்களே முதலீடு செய்து இணைத்து விடுகின்றனர்.

*இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலகில் எழுந்த பொருளாதாரத் தேக்கத்தை உடைத்தெறிந்து உலகை எழுந்து நிற்க உதவியது எம்.எல்.எம். முறை வர்த்தகமே. அமெரிக்காவில் 60 சதவீதவியாபாரம் எம்.எல்.எம். வாயிலாகவே நடப்பதாக ஆய்வு கூறுகிறது. மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிப்பதுதான் எம்.எல்.எம்.மின் நோக்கமாகும்.*

ஆண்-பெண், இளைஞர் - வயோதிகர், இருப்பவர் - இல்லாதவர், படித்தவர் - படிக்காதவர், நகரத்தார் - கிராமத்தார் என்று அனைத்துத் தரப்பினரையும் தற்போது வசீகரித்துக் கொண்டிருக்கும் மூன்றெழுத்து மந்திரம் எம்.எல்.எம். (Multi Level Marketing).பல்வேறு எம்.எல்.எம். கம்பெனிகளின் நிர்வாகிகள் ஊருக்கு ஊர் கருத்தரங்கம், கூட்டங்களை நடத்தி, 'இதோ பாருங்கள்... ஒரு புதிய பாதை' என்று காட்டிக் கொள்டிருக்கிறார்கள்.

சற்றே நேர்த்தியான உடை; கொஞ்சம் பரபரப்பு; கொஞ்சம் சிந்தனை; யார் சிக்கனாலும் மூச்சுவிடாத விளக்கம்; லட்சங்களுக்குக் குறையாத லட்சங்களுக்குக் குறையாத லட்சியங்கள்; கோடிக்கணக்கில் கனவு.... என்று இயல்பிலிருந்து சற்று லட்சியங்கள்; கோடிக்கணக்கில் கனவு... என்று இயல்பிலிருந்து சற்று அன்னியப்பட்டு, அதையே இயல்பாக்கிக் கொண்டிருப்பார்கள். எம்.எல்.எம். செய்து கொண்டிருப்பவர்களின் தோராயமான அடையாளம் இதுதான்.

www.tamilarangam.net

எம்.எல்.எம். என்பது என்ன? "முதலில் நீங்கள் சேர வேண்டும். பிறகு நீங்கள் இரண்டு அல்லது மூன்று பேரைச் சேர்க்க வேண்டும். நீங்கள் சேர்ப்பவர்களும் உங்களைப் போலவே இரண்டு அல்லது மூன்று பேரைச் சேர்ப்பார்கள். இப்படியே வளரும்போது உங்கள் வருமானம் பல லட்சங்களைத் தாண்டும். இதுதான் எம்.எல்.எம்." என்று தாங்கள் சந்திக்கும் ஒவ்வொரு நபரையும் வார்த்தைகளால் சிறைப் பிடிப்பார்கள்.

"ஆச்சரியத்தில் பிளக்கும் வாய் மூடுவதற்குள் அவர்களிடம் பணத்தைப் பெற்று எம்.எல்.எம்மில் உறுப்பினராக்கி விடுவார்கள். இவ்வாறு காற்றிலேயே கோட்டை கட்டும் வசீகரமான பேச்சுத் திறமை கொண்டவர்கள் வென்றிருக்கிறார்கள். அவர்கள் லட்சக்கணக்கில் சம்பாதிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் இதற்கு ஒரு அதீத சாமர்த்தியம் தேவைப் படுகிறது. ஆனால், எம்.எல். எம்மில் இணையும் எல்லோராலும் இது முடிவதில்லை. பலர் தோல்வியடைந்து, துவண்டு போகிறார்கள்" என்கிறார் கோனிப யோவின் பஞ்சாப் டிஸ்டிரியூட்டர்.

இது குறித்து மலேசியாவைத் தலைமையகமாகக் கொண்ட செயல் படும் கே-லிங்க் நிறுவனத்தின் ஜெனரல் டைரக்டர் தேவதாஸ் சொல்வ தென்ன?"

"எம்.எல்.எம்மில் சம்பாதிப்பதற்கு வரையறை எதுவும் இல்லை. இத்தனை மணியிலிருந்து இத்தனை மணியிலிருந்து இத்தனை மணி வரை கண்டிப்பாக உழைக்க வேண்டும் என்ற நேரக்கெடு எதுவும் இல்லை. எவ்வளவு வேண்டுமானாலும் இதில் சம்பாதிக்க முடியும். ஸ்பெஷாலிட்டி என்னவென்றால், அவர் விரும்பிய நேரத்தில் உழைத்தால் போதும். ஒரு பறவையைப் போல லகுவான வாழ்க்கையை அவர்கள் சுதந்திரமாக மேற் கொள்ளலாம். தணியாத ஆர்வம்; விஷயத்தை எளிதாக விளக்கும் நேர்த்தி; எல்லாவற்றுக்கும் மேலாகப் பொருத்தமான ஆள்களைத் தேர்ந்தெடுப்பது என்று நேர்த்தியான டெய்லர் தைக்கும் ஆடையைப் போல் கன கச்சிதமாகக் காரியம் செய்ய வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்கு வெற்றி நிச்சயம்" என்கிறார்.

"மிகவும் சொற்பமான உறுப்பினர்களிலிருந்து தொடங்கினோம். நாடு முழுவதும் ஒன்றரை லட்சத்துக்கு மேல் எங்களுக்கு டிஸ்டிபியூட்டர்கள் உள்ளனர். இது தவிர, ஆயிரக்கணக்கானோர் கணிசமாகச் சம்பாதிக்கின்றனர். 2003 டிசம்பருக்குள் எங்கள் டிஸ்டிரிப்பூட்டர் எண்ணிக்கையை 10 லட்சமாக உயர்த்தத் திட்டமிட்டுள்ளோம். மிகக் குறைந்த முதலீட்டில் மிக அதிகமான வருமானத்துக்கு வழிவகுக்கும் சுய வேலை வாய்ப்பை நாங்கள் அளித்து வருகிறோம்" என்கிறார். கோனிபயோ நிறுவனத்தின் பொது மேலாளர் சுந்தர்.

"இந்தப் பொருள் தான் வாங்க வேண்டும். இந்தப் பொருள் களைத்தான் விற்க வேண்டும். இந்தப் பொருள்களைத்தான் விற்க வேண்டும் என்ற எந்தக் கட்டுப்பாட்டையும் நாங்கள் விதிக்கவில்லை. உங்கள் இல்லத்துக்குத் தேவையான மளிகைச் சாமான்கள், துணிமணிகள், நகைகள்,

www.tamilarangam.net

பெட்ரோல் போன்ற அத்தியாவசியப் பொருள்களை வாங்கினால் போதும். செலவு செய்வதிலிருந்து வருமானத்தை ஈட்டும் எங்கள் திட்டம் போல் வேறெந்தத் திட்டமும் இல்லை" என்கிறார் எஸ்.எம். ராஜா. இவர் கேடியா இன்ஃபோ டெக் நிறுவனத்தின் சென்னைப் பிரிவு நிர்வாகி.

இது ஒரு புறம் என்றால், எம்.எல்.எம். என்றாலே மோசடி என்ற குரலும் உரத்து ஒலித்துக் கொண்டு தான் இருக்கிறது.

"இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. தாங்கள் பணத்தில் கொழிக்க எம்.எல்.எம். லீடர்கள் பலரைப் பலிகடாவாக்கியிருக்கிறார்கள். பல எல்.எம்.எம். கம்பெனிகள் மோசடி செய்வதெற்கென்றே அவதாரம் எடுக்கின்றன. அவர்கள் கவர்ச்சிகரமான வாக்குறுதிகளோடு நிறுவனத்தைத் தொடங்குவார்கள். கோடிக்கணக்கில் பணம் புரளும். பின்னர் அவர்களாகவே ஒரு போலீஸ் கம்ப்ளெய்ண்ட் கொடுத்து நிறுவனத்தை மூடிவிடுவார்கள். இவர்களின் லீலை இதோடு முடிந்துவிடாது. பிறகு வேறொரு பெயரில் புதிதாக நிறுவனத்தைத் தொடங்கி, அதில் கொள்ளை அடிப்பார்கள். இது வெளிப்படையாகவே நடந்து வருகிறது" என்று கூறுபவர் எம்.எல்.எம் மையே முழுநேரத் தொழிலாகக் கொண்டிருக்கும் நமசிவாயம்.

"நேர்மையாகச் செயல்படும் சில நிறுவனங்கள் பலரை லட்சாதிபதிகளாக்கி கார், பங்களா என்று அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியது. உயர்த்தி வருகின்றன என்பது உண்மைதான். ஆனால், அந்த நிறுவனங்களில் சேரும் ஆட்களை விடப் போலியான நிறுவனங்களின் வசீகர வார்த்தைகளில்தான் ஆயிரக்கணக்கானோர் சென்று மாட்டுகிறார்கள். இதற்கு எம்.எல்.எம்.மை முழுநேரத் தொழிலாகச் செய்யும பல லீடர்கள் உடந்தை. எங்களுக்குப் புகார் வந்தால் நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். மற்றபடி போலியான நிறுவனங்கள் குறித்து எச்சரித்தும் வருகிறோம்" என்கிறார் பொருளாதாரக் குற்றத்துறை அதிகாரி ஒருவர்.

கருத்து ரீதியில் எம்.எல்.எம். என்பது கூடி வாழ் என்பதை உள்ளடக்கியதுதான். இதை நடத்தும் நிறுவனங்கள் உண்மையாக இருக்கும்பட்சத்தில் இந்தியாவின் முக்கியப் பிரச்சினையான வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு இது மிகச் சிறந்த நிவாரணம் தான். எல்லாத் தொழிலிலும் உள்ள வெற்றி - தோல்வி சமாசாரங்கள் இதிலும் உள்ளன. எம்.எல்.எம். செய்வதற்கு ஒருவகையான திறமை தேவைப்படுகிறது. அந்தத் திறமை இல்லாதவர்கள் பணத்தை இழக்கிறார்கள்.

எனவே அரசு இதை ஒரு துறையாகக் கருதிச் சில சட்டதிட்டங்களுக்கு உள்படுத்தித் தீவிரமாகக் கண்காணித்தாலே போதும்,. நல்ல நிறுவனங்கள் வளரவும் மக்கள் பயனடையவும் வாய்ப்புகள் நிறைய உண்டு.

**– உமாபதி**

**நன்றி : தினமணிக் கதிர்**

www.tamilarangam.net

## அன்றைய போராளிகளே!
## வாசகர்களே! நண்பர்களே! தோழர்களே!

**ஒரு சில நிமிடங்கள்!**

**பொறுமையாக படியுங்கள்!**

அன்று ஒரு நாள் நாங்கள் - நீங்கள் எல்லோரும், இலங்கையில் தமிழ் இனம் அழிக்கப்படுவதை, சிறையிலும் - தெருவிலும் - வீட்டிலும் கோரமாக துன்புறுத்தப்பட்டு தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதை, சொந்த மண்ணில் நம்மவர்கள் அகதிகளாக்கப்பட்டதை, நமது தேசத்தின் வளங்கள் எல்லாம் சூறையாடப்படுவதை பார்த்தும் - கேள்விப்பட்டும் பொறுக்க முடியாது கொதித்தெழுந்தவர்கள்.

நமது உடமைகளையும் - உயிரையும் - உறவுகளையும் துச்சமாக மதித்து, உயிரைக் கொடுத்தாவது தமிழ் மண்ணையும் - மக்களையும் காக்கப் புறப்பட்டவர்கள், பேராளிகளாக மாறியவர்கள்.

சிறீலங்கா இனவாத அரசை எதிர்த்து போராடிய ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்ட இயக்கங்களில் இணைந்த வர்கள், மேடுகளில் காடுகளில் பயிற்சி முகாம் அமைத்தவர்கள், படகுகளில் கடல் கடந்தும் - விமானங்களில் நாட்டு எல்லைகளை கடந்தும் போர்ப்பயிற்சிக்காக வெளிநாடுகளில் வாழ்ந்தவர்கள். பணம் சம்பாதிக்கச் சென்ற வெளிநாட்டு வாழ்வின் சுகபோகங்களை - பண ஈட்டல்களை கைவிட்டு தாய்நாட்டுக்காக போராட - இராணுவ பயிற்சி பெற வேறு நாடுகளுக்கு வந்தவர்கள்.

போர்ப்பயிற்சிக்கான பயணங்களில், இராணுவப் பயிற்சி முகாம்களில் எதிர்பாராத தவறுகளால் சில தோழர்களை இழந்தவர்கள். சிறீலங்கா அரசு படைகளுடனான மோதலில்

எங்களுடன் இருந்த பல போராளிள், நாங்கள் கொண்டிருந்த இலட்சியத்தை அடைய வீரமரணம் அடைந்தார்கள், தங்கள் உயிரை - உடலை தாய் மண்ணுக்கு தியாகம் செய்தனர். அவர்களை நாம் மறக்க முடியுமா? தேச விடுதலைக்காக தங்களை தாய்மண்ணுக்கு ஈய்ந்த அனைத்து இயக்க போராளிகள் நினைவுதினமான "யூலை தியாதிகள் தினத்தை" மறக்க முடியமா?

ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனத்தின் - தமிழ்த் தேசத்தின் சுதந்திரத்தை வேண்டி - சுரண்டப்படுகின்ற தமிழ் மக்களின் விடுதலைக்காக ஆயிரம் ஆயிரம் ஆண்களும் - பெண்களும் இரத்தம் சிந்தி போராடிக் கொண்டிருந்தபோது, தலைமை அதிகார வெறியும், தனி இயக்க சர்வாதிகார ஆணவமும் கொண்ட, ஆயுதப் போராட்ட இயக்கங்களின் தீர்மானகரமான தலைவர்கள் தங்களின் தனி இயக்க சர்வாதிகாரத்தை நிறுவதில் குறியாக இருந்தனர். இயக்கத் தலைமைகள் ஒவ்வொன்றும் அன்னிய நாடுகளிடம் இருந்து ஆயுதம் - பணம் பெறுவதற்காக ஒன்றை ஒன்று மாறி மாறி காட்டிக் கொடுத்தன. அன்னிய நாடுகளின் சூழ்ச்சிக்கு இரையாகின. அழித்தொழிப்பில் தடைவிதிப்பில் இறங்கின.

விடுதலைப் போராட்டம் குறித்த, இத்தலைமைகளின் குட்டி முதலாளித்துவ அரசியல் - இராணுவ சிந்தனைகளும், குறுகிய கால வெற்றி பற்றிய கற்பனையும், போாராட்டத்தில் எல்லையற்ற நம்பிக்கையீனங்களை மக்கள் மத்தியில் - போராளிகள் முன்வெளிக் காட்டியது.

இயக்கங்களுக்கு இடையிலான மோதலில் - அழித் தொழிப்பில் நூற்றுக்கணக்கான பெண் - ஆண் போராளிகள் இயக்கத் தலைமைகளால் பலியெடுக்கப்பட்டனர். சிறீலங்கா இனவெறி அரசின் சித்திரவதைகள் - கொடூரக் கொலைகள், இயக்கத் தலைமைகளால் மீண்டும் நினைவு படுத்தப்பட்டது.

இயக்கத் தலைமைகளின் தவறான இராணுவ - அரசியல் / நடை முறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து. மாற்றாக சரியான அரசியல் - இராணுவ வழிகளை/நடைமுறைகளை முன்வைத்து இயக்கங்களின் உள்ளே குரல் எழுப்பி யவர்கள் மீது, இயக்கச் சிறைகளில் வைத்து கீழ்த்தரமான சித்திரவதைகளும் 'பட்டம்'

www.tamilarangam.net


சுட்டுதல்களும் தலைமைகளால கட்டவிழ்த்து விடப்பட்டது. தேசத்தின் சுதந்திரம் - மக்களின் விடுதலை - சமூகப்புரட்சி பற்றி அறிவு பூர்வமான பார்வையுள்ள, அக்கறையுள்ள, நேர்மையான - உறுதியான முன்னணிப் போராளிகள் கோரமான கொடிய சித்திரவதைகளுக்கு பின் வெட்டி புதைக்கப்பட்டனர். சுட்டு எரிக்கப்பட்டனர். போர்முனைகளில் சதிக் கொலைகள் மூலம் வீரர்களாக்கப்பட்டனர். பலர் மனநோயாளிகளாக்கப் பட்டனர். ஒரு தட்டில் சாப்பிட்டு, ஒன்றாகப்படுத்து உறங்கி, உயிருக்கு உயிராக பழகிய தோழர்கள். உள் இயக்கப் படுகொலையில், சக இயக்க அழித்தொழிப்பில் பலியாகிப் போயினர். இவை நீங்களும் - நாங்களும் அறிந்தது, உணர்ந்தது.

புலிகள் இயக்கத்தின் சர்வாதிகார அழித்தொழிப்பை - தடை விதிப்பை எதிர்கொள்ள முடியாமல், தாங்கள் சார்ந்த இயக்கத் தலைமைகளின் தவறுகளை திருத்த முடியாமல் போராளிகள் விழி பிதுங்கினர். தங்களை தற்காது வாழ வழி தேடினர். உயிரை மயிராக நினைத்து வந்த நிலைமாறி - மயிரையும் உயிராக மதிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர். ஒவ்வொரு போராளியும் தனக்கு தெரிந்த வழிகளில் தன்னை தற்காக்க முயன்றார்கள். தன்னால் முடிந்தளவுக்கு தங்களுடன் நெருங்கி இருந்த போராளிகளையும் பாதுகாத்தனர். தாய் நாட்டுக்கும் - வெளிநாட்டுக்கும் கூட்டி வந்தனர். கூப்பிட்டனர். தாய்நாட்டின் சுதத்திரத்துக்காக போராடப் புறப்பட்டவர்கள், தங்களை பாதுகாப்பதற்காக வெளிநாடுகளுக்கு செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டனர். இது கதையல்ல நிஜம்.

இங்கே தான், நீங்கள் - நாங்கள் என்ற நிலையை அடைந்தோம். நாங்கள் சார்ந்த இயக்க தலைமைகளின் கொலைப் பட்டியலில் வைக்கப்பட்ட நாம், உளவுப் பிரிவின் துப்பாக்கித் தேடுதல் வேட்டையை, நஞ்சுவைத்து கொலை செய்யும் சூழ்ச்சிகளை எதிர்கொண்டோம். எந்த ஒரு விடுதலை இயக்கமும் தேசிய விடுதலைப் போரில் இருப்பதை தடை செய்யும் - அழித்தொழிக்கும், தனி இயக்க சர்வாதிகாரம் கொண்ட புலிகளின் கைதுகளை - சிறைகளை படுகொலைகளை - எதிர்கொண்டோம். 1987 இலையுதிர் காலத்தில் போராளிகள் கலைந்து கொண்டிருக்கையில் புரட்சிகர தேசபக்த விடுதலை

இயக்கத்தை கட்டத் தொடங்கினோம். "தேசபக்தன்" பத்திரிகை மூலம் நம்மை அடையாளப்படுத்தினோம், எல்லா இயக்கங்களிலும் இருந்த அராஜக எதிர்ப்பு சக்திகளை அணிதிரட்ட முயன்றோம்.

ஆயுதம் தாங்கி போராடிய இயக்கங்கள் மத்தியில் 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒரு அரசியல் பிளவை உருவாக்கியது. அன்னிய ஆக்கிரமிப்பை எதிர்க்கும் தமிழீழ தேசிய வரலாறு தொடங்கியது.

தமிழீழ தேசிய வளங்களும், தமிழீழ மக்களின் உழைப்பும், சிறீலங்காவின் இனவாத ஆளும் வாக்கங்களால் கொள்கை யடிக்கப்படுவது-சுரண்டப்படுவதில் இருந்த பாதுகாப்பது. இனவாத அரசு படைகள் தமிழ் மண்ணில் இருந்து வெளியேற்றப்படுவது, இன அழிப்பில் இருந்து தமிழ் இனம் பாதுகாக்கப்படுவது மட்டும், தமிழீழ தேசிய விடுதலை ஆகிவிடாது என உரைத்தோம்.

உலக வளங்களை கொள்ளையடித்து, உலக மக்களின் உழைப்பை நவீன - மிக நவீன முறையில் ஒட்டச் சுரண்டி வரும் பல்தேசிய கொம்பனிகள்(MNC) , தேசம் கடந்த கொம்பனிகள் (TNC) பன்னாட்டு அரசுகளின் (UN) உலகமயமான தேசிய ஒடுக்கு முறையில், முதலாளித்துவ ஏகபோக கொள்ளையில் இருந்தும் தமிழீழ தேசிய வளங்களும - தமிழீழ மக்களின் உழைப்பும் விடுதலை பெற வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டும். அதுதான் உண்மையான தமிழீழ தேசிய சுதந்திரம், தேசிய விடுதலை என்பதை தெளிவாக முன்வைத்தோம்.

புலிகள் இயக்கம், தமிழீழ தேசிய விடுதலைப் போராட் டத்தை - போரை, உண்மையான தேசிய சுதந்திரத்தை - மக்களின் விடுதலை நோக்கி முன்னேடுத்துச் செல்லவில்லை என்பது பட்டவர்த்தனமாக இன்று நிரூபிக்கப்பட்டு வருகின்றது. ஏகாதிபத்திய - தேசிய ஒடுக்குமுறை நிறைந்த உலகமய மாக்குதல் முறைக்குள், தங்களின் தமிழ் இன அதிகாரத்தை நிறுவிக் கொள்வதில் புலிகள் குறியாக இருப்பது அய்யத்திற் கிடமற்றது. உலகமயமாக்கல் வழியிலான அன்னியத் தேசிய ஒடுக்குமுறையை அனுமதித்து - அங்கீகரித்தபடி, புலிகள்

www.tamilarangam.net


முன்வைக்கும் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் என்பன, உண்மையான தமிழீழ தேசிய சுதந்திரப் போரை - தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை திசைதிருப்பும் அரசியல் பிரச்சாரமாகும்.

தமிழீழத் தேசிய வளங்களையும் - மக்களின் உழைப்பையும் சுரண்டிக் கொள்ளையடித்து அன்னியருடன் பங்கு போட்டுக் கொள்ளும், தமிழீழ தரகு முதலாளித்துவ அரசியலையும் - அதிகார கட்டமைப்பையும் உடைத்தெறியும் போராட்டத்துடாகவே, தமிழீழ தேசிய சக்திகளின் புரட்சிகர தேசிய விடுதலைப் போராட்டம் முன்னேற முடியும், தமிழீழ புதிய சனநாயக அரசை நிறுவும் இலட்சியத்தை அடைவதற்காக, நாங்கள் எங்களை அர்ப்பணித்துப் போராடி வாழ்ந்து வருகிறோம். புரட்சிகர தேசிய இலட்சியத்தை வெல்வதற்கு ஆக இரத்தம் சிந்திய எல்லா இயக்க போராளிகளின் கனவுகளையும் நாம் சுமந்து நிற்கிறோம்.

ஆனால், "தேசபக்தன்" பத்திரிகையை தொடர்ந்து காலக் கிரமத்தில் வெளியீடுவதற்கு கூட முடியாத நிலையில் நிதி நெருக்கடியிலுள்ளோம். நமது வெளியீட்டை வெளியிட ஒரு பதுகாப்பான அச்சகம் இன்றி, அவதிப்படுகின்றோம். மின்கணினிப் பதிவை ஓரிடத்திலும், உள் ஆக்கங்களை ஒரு அச்சகத்திலும், அட்டையை வேறு அச்சகத்திலும் அச்சுப்பதிப்பு செய்து, ஒன்றாக வேறு ஓரிடத்தில் இணைத்து வெளீயிட்டை வெளிக் கொணர்கிறோம்.

இனி வரும் காலங்களில் நெருக்கடிகள் இன்னமும் அதிகரிக்கப்போகின்றது. நாமே ஒரு சிறு அச்சகத்தை உரு வாக்கவும், 'தேசபக்தன்' வெளியீட்டை காலக்கிரமத்தில் வெளியிடவும் நிதி உதவி வேவைப்படுகிறது.

தமிழீழ புரட்சிகர தேசபக்த விடுதலை இயக்கம் ஒன்றின் அவசியத்தை, புரட்சிகர வெளியீடு ஒன்றின் தேவையை, வரலாற்று ரீதியான நேரடி அனுபவங்களுடன் புரிந்து கொள்ளும் தமிழீழ முற்போக்கு சனநாயக சக்திகளிடம், தேசபக்தன் வாசகர்களிடம் எங்களின் நிதித்தேவையை முன் வைக்கிறோம்.

தமிழீழ புதிய சனநாயக கட்சி (தமிழீழம்)
www.tamilarangam.net

# தேசபக்தன்

"சிறு துளி பெரு வெள்ளம்" அன்பளிப்பு 20 உரூபா / வெளிநாடு 1 யூரோ / 1 டொலர்

தமிழீழ புதிய சனநாயக கட்சி தி.பி. 2034 (2003) இதழ் 23

அன்று விடுதலைப் போராட்டம் - போராட்ட இயக்கம் சார்ந்து ஒரு பரந்துபட்ட எழுச்சி ஆதரவு தமிழீழ மக்களிடம் வெளிப் பட்டது. ஆனால், 25 வருட போராட்ட இயக்கங்களின் நடை முறைகளில் இருந்து, நிதிச் சுருட்டல்களிலிருந்து மக்களும் ஒரு அனுபவரீதியான படிப்பனையை பெற்றிருக்கிறார்கள். இதேபோல் தமிழீழ சமூகத்தின் முற்போக்கு அரசியல் ஆதரவுச் சக்திகளும் பட்டறிவை, திட்டமிட்ட தெளிவான ஆதரவு தெரிவிப்பு முறையை உள்வாங்கிக் கொண்டுள்ளனார்.

நீங்களும், இயக்கங்களில் - இராணுவ முகாம்களில் இருந்தபோது இயக்கத்தின் அடிப்படை தேவைகளுக்கான நிதியை ஆயிரம் ஆயிரமாக கொடுத்து உதவியவர்கள், அன்று வெளி நாடுகளில் உழைத்துக் கொண்டிருந்த எங்கள் தேசத்து உறவுகள் என்பதற்கு சான்று தேவை இல்லை.

அன்று நீங்கள் கொண்டிருந்த இலட்சியத்துக்காக உங்கள் உயிரைக் கொடுக்க முன்வந்தீர்கள். அந்த இலட்சியத்துக்காக நிற்கும் எங்களுக்கு, இன்று உங்களின் உயர்ந்தபட்ச உதவி தேவைப்படுகிறது.

உங்களின் உதவி குறித்த விபரங்களை கீழ்காணும் 3 மின்னஞ்சல் முகவரிக்கும் எழுதுங்கள், அல்லது உங்களிடம் தேசபக்தன் வெளியீட்டை கொடுப்பவருடன் நேரடியாக கலந்து ஆலோசியுங்கள். உதவுங்கள்.

dharma4all2000@yahoo.com
robertdesa@hotmail.com
patriot_editor@yahoo.com

- அவசர கால நிதிக்குழு.

RGSD.ISSN-07647-2262 RNI 04512/1999 CANADA

N D P T

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழீழ புதிய ச[illegible] (தமிழீழம்)

www.tamilarangam.net

NDPT NDPT NDPT NDPT NDPT NDPT NDPT

# தேசபக்தன்

NDPT NDPT NDPT NDPT NDPT NDPT NDPT NDPT



## "இலங்கை யுத்தத்தின் பரிணாமமும் உலகமயமாக்கலின் படையெடுப்பும்" என்ற நூல்

**வெளிவந்துவிட்டது. படியுங்கள்!**

| ஆண்டு | அரசு பாதுகாப்புக்கு ஒதுக்கியது | அரசு பாதுகாப்புக்கு செலவானது |
|---|---|---|
| 1997 | 2730 கோடி | 4500 கோடி |
| 1998 | 2910 கோடி | 5100 கோடி |
| 1999 | 3300 கோடி | 6340 கோடி |

இனவாத அரசு, சிறுபான்மை இனங்கள் மீது நடத்தும் இன யுத்தத்துக்கு மக்களின் உழைப்பில் இருந்து கோடிக்கணக்கான பணத்தை வாரியிறைக்கின்றது. இதை எதிர்த்து தேசியத் துக்காக போராடும் சிறுபான்மையினங்கள், தேசியத்துக்கு பதில் குறுந்தேசிய இன யுத்தத்தை நடத்துகின்றன. இதனால் புலிகளின் இராணுவச் செலவு, அரசின் இராணுவ செலவுடன் ஒப்பிடும் போது 20 சதவீதமாகும். வடக்கு கிழக்கு தேசிய வருமானத்தில் 5.78 முதல் 10 சதவீதத்தை யுத்தத்தில் பயன் படுத்துகின்றது.

புலிகள் 2000 ஆண்டு வரை அண்ணளவாக 4260 கோடி ரூபாயை யுத்தத்துக்கு செலவு செய்துள்ளதாக மதிப்பிடப் படுகின்றது

இதே காலத்தில் சீறிலங்கா இராணுவம் 35,118 கோடியை செலவு செய்துள்ளது. ஒட்டு மொத்தமாக தேசிய வருமானத்தில் 50 முதல் 60 ஆயிரம் கோடி இராணுவத்துறை சார்ந்து அழிக்கப்பட்டுள்ளது. இந்த யுத்தத்தில மக்களின் தேசிய வளங்கள் அழிக்கப்படும் அதே நேரம் மக்களுக்கு எதை பெற்றுத் தர இதை நடத்துகின்றனர் என்றால் எதுவுமில்லை.

NEW DEMOCRATIC PARTY OF THAMILEELAM

# N D P T

RGSD.ISSN-07647-2262 RNI 04512/1999 CANADA

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்